விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 08 சனிக்கிழமை (20.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 063

# அனைத்து குற்றங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டார் ஷிராணி

## கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு



(கொழும்பு)

நாட்டின் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான அனைத்து ஊழல் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் அவரை விடுவிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## விமலுக்கு அழைப்பாணை

கடந்த 6ஆம் திகதி பௌத்தலோக மாவத்த மற்றும் ஹெவலொக்வீதியை தடை செய்தமைக்காக விமல் வீரவன்ஸ உள்ளிட்ட ஏழு பேருக்கும் மார்ச் 18ஆம் திகதி நீதி மன்றத்துக்கு சமுகமளிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்தல் விடுத்துள்ள ார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசைனின் இலங்கை விஜயத்தை ஆட்சேபித்துதும்முல்ல சந்தியிலுள்ள ஐ.நா

24ஆம் பக்கம் பார்க்க

## ஆணைக்குழு முன் மீண்டும் மகிந்த

பாரிய மோசடி, ஊழல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று மீண்டும் விசாரணைக்காக ஆஜராகியுள்ளார்.

இதன் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த அவர் கூறுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்துவதற்காக கட்சியை விட்டு நான் முதலில் வெளியேறவில்லை எனவும், முதல் முதலாக

24ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் வாகன விபத்து இருவர் பலி

(மன்னார்)

மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இலுப்பைக் கடவை பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இலுப்பை-அந்தோனியார் புரம் கிராமத்தைச் சேர்ந்த ஜேர்ஸ் மெக்ஸி (வயது 23), சதாசிவம் கஜேந்திரன் (வயது 30) மற்றும் ஆர்.ரவிகுமார் (வயது 30) ஆகியேரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதில் ஜேம்ஸ் மெக்ஸி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் சதாவசிம் கஜேந்திரன் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்

24ஆம் பக்கம் பார்க்க

## குளவி கொட்டியதில் குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)


குளவிக் கொட்டுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 4

23ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் பேசும் ஆளுநர் கிடைத்திருப்பது மகிழ்ச்சி

### முதலமைச்சர் விக்கி வரவேற்பு



23ஆம் பக்கம் பார்க்க

## ஊழியர் சேமலாப நிதியை இனி பிள்ளைகளின் கல்விக்காக பெறலாம்

### இராஜாங்க அமைச்சர் சமரவீர யாழில் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்காலத்தில் ஊழியர் சேமலாப நிதியை பிள்ளைகளின் கல்விக்கு பெற்றுக் கொள்ளக்கூடியதாக சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும் என தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் ரவீந்திரசமரவீர

24ஆம் பக்கம் பார்க்க

## காணாமல்போனோரின் விசாரணைக்கு இராணுவத்தின் ஆவணங்கள் உதவும்

### உண்மைக்கு வாய்ப்பு கிடைக்கும் என்கிறார் ராஜித

(கொழும்பு)

போரின் இறுதியில் இராணுவத்திடம் சரணடைந்த பொதுமக்கள் தொடர்பான ஆவணங்களை பரிசீலனை செய்வது சிறந்தது. உண்மைகளை கண்டறிய இது நல்ல தொரு ஆதாரமாகும். இவ்வாவணங்கள் விசாரணை செயற்பாடுகளுக்கு வலுச் சேர்ப்பதாக அமையும் என்று அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். இது தொடர்பில்

23ஆம் பக்கம் பார்க்க

## கைத்தொலைபேசி சர்ச்சையை அடுத்து யோஷிதவின் சிறைக்கூட பகுதியில் நுண் அலைகளை தடுக்கும் கருவி

(கொழும்பு)

வெலிக்கடச் சிறைச்சாலையில் யோஷித ராஜபக்ஷ தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜே விடுதிப் பகுதியில் கைத்தொலைபேசி நுண அலைகளைத் தடுக்கும் கருவிகள் பொருத்தப்படவுள்ளன. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷ சிறைக்கூடத்தில் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவதாக எழுந்துள்ள சந்தேகத்தை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யோஷித ராஜபக்ஷ தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜே விடுதி அருகில் கிடந்த கைத்தொலைபேசி ஒன்று சிறைச்சாலை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

23ஆம் பக்கம் பார்க்க

## 36,430 தாதியருக்கு நாட்டில் பற்றாக்குறை


(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் உள்ள 36, 430 தாதிகளுக்கு பற்றாக்குறை நிலவுவதாக அகில இலங்கை தாதிகளின் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், அரசாங்க வைத்தியசாலைகளில் 64,430 தாதியர்கள் சேவையில் இருக்கவேண்டும் என உலக சுகாதார அமைப்பு பரிந்துரை

23ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பண்ணைப் பகுதியில் வைத்து 26 கிலோ கேரள கஞ்சாவுடன் 3 சந்தேக நபர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைப் பகுதியில் 13 பொதிகளில் வைக்கப்பட்ட 26 கிலோ நிறையுடைய கேரள கஞ்சாவுடன் 3 சந்தேக நபர்களை யாழ். பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வுதுறை பொலிஸார் நேற்று

24ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரன் உயிரோடு உள்ளார்-நெடுமாறன்

(சென்னை)

விடுதலைப் புலிகள் அமைப்பின தலைவர் பிரபாகரன் இறந்து விட்டதாக அறிவித்த அறிவிப்பு பொய்யாகும். பிரபாகரன் உயிருடனேயே உள்ளார். மீண்டும் ஈழப்போர் தொடங்கும் என தமிழ் தேசிய இயக்க நிறுவனத் தலைவர் பழ.நெடுமாறன்

23ஆம் பக்கம் பார்க்க

## சரணடைந்தவர்களின் பட்டியல் 58ஆவது டிவிசனிடம் உள்ளதா?

### எனக்கு தெரியாது என்கிறார் இராணுவ பேச்சாளர்



(கொழும்பு)

போரின் இறுதிக் கட்டத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பாக நடத்தப்பட்டு வரும் நீதிமன்ற விசாரணைகளுக்கு இலங்கை இராணுவம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜய

23ஆம் பக்கம் பார்க்க

## வித்தியா கொலை தொடர்பான முழு அறிக்கையை சமர்ப்பியுங்கள்

### ஊர்காவற்றுறை நீதவான் கடும் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பிலான முழுமையான அறிக்கையினை குற்றப்புலனாய்வு பிரிவினர் அடுத்த வழக்கு தவணையில் மன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் வை. எம்.எம்.ரியால் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படாது விட்டால் அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதவான் எச்சரிக்கை செய்துள்ளார். கடந்த வருடம் மே மாதம்

24ஆம் பக்கம் பார்க்க

# இளைஞர் குழுவினால் தாக்கப்பட்ட இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் குழுவால் தாக்கப்பட்ட இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கோண்டாவில் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கோண்டாவில் கிழக்கை சேர்ந்தவர்களான நகுலேஸ்வரன் றொபின்சன் (வயது-23), முத்துராசா விதுசன் (வயது-20) ஆகிய இளைஞர்கள் படுகாயமடைந்தவர்களாவர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

மேற்படி இரு இளைஞர்களும் கோண்டாவில் சந்தியில் நின்று கதைத்துக் கொண்டிருந்தவேளை இரண்டு ஆட்டோக்களில் வந்த இளைஞர் குழு ஒன்று எந்தவொரு பேச்சுவார்த்தையும் இன்றி இவ்விரு இளைஞர்களையும் கொட்டன்கள் கொண்டு தாறுமாறாக தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதனால் படுகாயமடைந்த நிலையில் இருந்த அவ்விரு இளைஞர்களும் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-5-30)


## காணி விற்பனை

A9 வீதி நுணாவில் சந்தி மட்டுவில் தெற்கு பருத்தித்துறை வீதியில், துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 17 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
3 1/2, 7, 10 என பிரித்துக் கொடுக்கப்படும். தென்னை, மா போன்ற மரங்கள் வைப்பதற்கும், வீடு கட்டுவதற்கும் உகந்த இடம். (3649)

0778730129

## முதுகுவலி, முழங்கால் வலியா?


யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களின் சேவையை பல ஆண்டுகளாக வழங்கிவரும் சம்பந்தர் மொடேர்ன் வைத்திய நிலையத்தின் மூலம் நரம்பியல் வைத்திய நிபுணர் Neurosurgeon எலும்பு முறிவு நெறிவு வைத்திய நிபுணர் Orthopedic Surgeon என்பவர்களின் வைத்திய சேவையை பெற்று கொள்வதன் மூலம் உங்கள் நீண்டநாள் முதுகுவலி,கை, கால், முழங்கால் வலி போன்ற நோய்களுக்கு தீர்வு காணலாம்.

கிளை:

சம்பந்தர்
மொடேர்ன் வைத்திய நிலையம்
Of A இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்.

மக்கள் வங்கி முன் வீதி,
நாகநாதன்
வைத்திய நிலையம்
அருகே, சங்கானை.
0778730129 (3649)


## சேவைநலன் பாராட்டு




### திரு. காசிப்பிள்ளை புஸ்பநாதன்

தபால் அத்தியட்சகரும், பிராந்திய நிர்வாக அலுவலரும்

38 வருட சேவைக்காலம் | 20-02-2016

| | |
|---|---|
| தபாலதிபர் தரம் II<br>04.04.1977 - 30.12.1990 | பேராதனை, பம்பலபிட்டிய, வெள்ளவத்தை, ஹற்றன், மன்னார், பேசாலை, யாழ்ப்பாணம், அனலைதீவு, நயினாதீவு |
| தபாலதிபர் தரம் I<br>31.12.1990 - 31.06.2006 | வவுனியா, யாழ்ப்பாணம், ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் |
| நுண்ணாய்வுப் பரிசோதகர்<br>01.04.2006 - 28.10.2016 | யாழ்ப்பாணம், வவுனியா |
| பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்<br>29-10-2010 - 14-07-2014 | வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி,யாழ்ப்பாணம், |
| அஞ்சல் அத்தியட்சகரும் பிராந்திய நிர்வாக அலுவலரும்<br>15.07.2014 - 19.02.2016 | யாழ்ப்பாணம் |

தனது ஓய்வுக்காலத்தில் குடும்பத்தினருடன் சகல சௌபாக்கியங்களுடனும் மகிழ்வுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :- குலசேகரம் குடும்பம்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியையான திருமதி கனகாம்பரி சிவனேஸ்வரநாதனின் அன்புத் தாயார்


### திருமதி நாகேஸ்வரி பத்மநாதன்

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு ஆழ்ந்த மனவருத்தத்தினை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி

(சி-3789)

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி சிவபாதம்

வதிரி புலாவராவோடையை பிறப்பிடமாகவும், பரந்தன் 5-ம் வாய்க்காலை வசிப்பிடமாகவும், பொலிகண்டி பச்சந்தை தெருவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவபாதம் நேற்று (19.02.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - மீனாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற கந்தையா - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், சதாசிவம், சிவராசா, ராஜேஸ்வரி, சிவஞானம், சிவலோகநாதன் ஆகியோரின் சகோதரனும், பரமேஸ்வரி (அவுஸ்ரேலியா), சரோஜினிதேவி (லண்டன்), திருநாவுக்கரசு (பிரான்ஸ்), கலாஜினி, சிலோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும், ராஜேஸ்வரன், ராஜப்பிரபா, ராஜ்குமார், ரதீஸ்குமார்(அமரர்), சுரேகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகௌரி, லோகேஸ்வரன், சுதர்சினி ஆகியோரின் மாமனாரும், மதிவதனனின் (அவுஸ்ரேலியா) சித்தப்பாவும், நவநீதன் (லண்டன்), செல்வநிதன் (பிரான்ஸ்), மஞ்சுனா (லண்டன்), பிரேமிளா (லண்டன்), திபர்சன், வர்சினி (லண்டன்), சுஜன், திவ்வியவந்தி, ஜீவந்திகா ஆகியோரின் பெரியதந்தையும், அமிர்தினி (ஜேர்மனி), தினேஸ் (ஜேர்மனி), தாட்சாயினி (கனடா) ஆகியோரின் மாமனாரும், சர்மிலன், அகல்யா, அனோஜா, அச்சரா, நேருஜன், அஸ்வினி, அபிநயா, அட்சரன், அட்சயா, அபிலாசினி, அரவிந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் பொலிகண்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்


பச்சந்தைத்தெரு,
பொலிகண்டி கிழக்கு. (சி-3786)

தொ.பே: 0212056830, 0771293333

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் ஐயாத்துரை நாகம்மா

மலர்வு
1944 - 09 - 02



உதிர்வு
2014 - 02 - 12

குடும்பத்தின் குலவிளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் - நற்
பண்புகளுடன் எமை வழிநடத்தி
எமக்காகவே வாழ்ந்து.....
இரண்டாண்டுகள்
ஓடி மறைந்து விட்டதென்று
நம்ப முடியவில்லை
நாளும் எப்பொழுதும் எம் இதயத்தில்
அகல்விளக்காய்ப் பிரகாசித்துக் கொண்டுதான்
இருக்கின்றீர்கள் எங்கள் அம்மாவே


ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி

(3652)

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# வடக்கு ஆளுநர் கடமைகளை நேற்று பொறுப்பேற்றார்




வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக ரெஜினோல்ட் குரே நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக தனது அலுவலகத்தில் கடமைகளை பொறுப் பேறுக்கொண்டார். முன்னதாக ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆளுநரினை மாலை அணிவித்து வரவேற்றார். பின்னர் வடக்கு மாகாண முதலமை ச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரும் ஆளுநரினை வரவேற்றனர். (படங்கள்- உ.சாளின்)

## இந்திய செய்மதி திட்டத்துக்கு இலங்கை மாத்திரம் உடன்பாடு

(கொழும்பு)

2014ஆம் ஆண்டு சார்க் மாநாட்டில் இந்திய பிரதமர் மோடியினால் முன்வைக்கப் பட்ட செய்மதி திட்டத்துக்கு இலங்கை மாத்திரமே உத்தி யோகபூர்வமாக இணக்கம் வெளியிட்டுள்ளதாக டைம்ஸ் ஒப் இந்தியா செய்தி வெளியிட் டுள்ளது.

பாகிஸ்தான் உட்பட்ட ஏனைய நாடுகள் இன்னும் தமது உத்தியோகபூர்வ உடன் பாட்டை வெளியிடவில்லை.

இந்தநிலையில் குறித்த செய்மதி திட்டத்தை பயன்ப டுத்தி இந்தியா, தமது முக்கிய தரவுகளை கண்டுபிடித்து விடுமா என்ற அச்சம் காரண மாகவே பாகிஸ்தான் அதற்கு உடன்பாட்டை வெளியிடா மல் இருந்து வருகிறது.

இதேவேளை குறித்த செய் மதிக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலை யில் அது 2017 ஆரம்பத்தில் தமது பணிகளை ஆரம்பிக் கும் என்று எதிர்ப்பார்க்கப்படு கிறது.

சார்க் நாடுகளின் தொலைத தொடர்பு, ஒலி, ஒளிபரப்பு, அனர்த்த முகாமை போன்ற வற்றின் சேவைகளை பெற் றுக்கொள்வதற்காகவே இந்த செய்மதி திட்டத்தை இந்தியா பரிந்துரைத்திருந்தது என்று இந்திய நாளிதழ் குறிப்பிட் டுள்ளது. (இ)

## போர் உபாயங்களை பகிர்ந்து கொண்ட சரத்

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினர் சரத் பொன் சேகா நேற்று முன்தினம் ஸ்ரீல ங்கா கிரிக்கெட் சபைக்கு விஜ யத்தை மேற்கொண்டு கலந் துரையாடல்களில் ஈடுபட் டார். இதன்போது இலங்கைகிரிக் கெட அணி சவால்களை வெற்றி கொள்வது தொடர்பில் அவர் கலந்துரையாடினார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தலைவர் திலங்க சுமதிபால வின் அழைப்பின் பேரிலேயே சரத் பொன்சேகா இந்த விஜ யத்தை மேற்கொண்டார்.

இலங்கை இராணுவம் எதிரிகளை வெற்றிக்கொள்ள பயன்படுத்திய உபாயங்கள் குறி த்து அவர்இதன்போது இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கு தெளிவுபடுத்தினார். (இ)

## மக்களை ஏமாற்றும் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

மக்களை ஏமாற்றி பணம சம்பாதிக்கும் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பதில் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.



பொது மக்களின் முயற்சி களை சூறையாடி இலாபம் தேடுவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு அனுப்பும் முகவர் நிறுவ னங்களுக்கு எதிராக நடவடி க்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரி வித்தார்.சவுதி அரேபியா, கட்டார், குவைத், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஜோர்தான் உட் பட மத்திய கிழக்கு நாடுக ளில் பணிபுரிந்து கொண்டிருக் கும் போது பல்வேறு காரணங் களினால் உயிரிழந்த இலங்கை யர்கள் 34 பேரின் உறவினர்க ளுக்கு 5 கோடி 70 இலட்சம் ரூபா நிதியை வழங்கி வைக் கும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ)

## மகிந்த கட்சியை விட்டு விலகினாலும் நான் சு.கவை விட்டுப்போகமாட்டேன்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்சியை விட்டு விலகினாலும் தாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியை விட்டு விலகப் போவ தில்லை என காணி இராஜா ங்க அமைச்சரும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான ரிபி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொ ன்றுக்கு அளித்த விசேட நேர்காணலில் அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

நான் நல்லவொரு ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சி உறுப் பினராவேன். எனவே கட் சியை விட்டு விலகிச் சென்று புதிய கட்சியொன்றின் உறுப் புரிமை பெற்றுக்கொள்ளும் திட்டமில்லை.

அத்துடன், கட்சியை பிள வடையச் செய்யும் பாவச் செயல்களில் பங்கேற்காது கட்சியை வெற்றியடையச் செய்ய முயற்சிப்பேன். எவ் வாறாயினும், ஸ்ரீலங்கா சுத ந்திரக் கட்சியை பிளவடை யச் செய்ய மகிந்த முயற்சிப் பார் என தாம் கருதவில லை.

எனினும் அவர் விரும் பிய தீர்மானம் எடுக்க அவரு க்கு உரிமையுண்டு என்ப தனை தாம் உள்ளிட்டவர்கள் மறுப்பதற்குமில்லை.

இந்நிலையில், அரசியல் யதார்த்தங்களை புரிந்து கொள்ள வேண்டும். உணர் வுகளுக்கு அடிமையாகி தீர்மா னங்களை எடுக்கக்கூடாது.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் முன்னோக்கச் செல்வதனைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது என அவர் மேலும் தெரிவித்து ள்ளார். (இ)

## அலரிமாளிகையில் அழகிகளுடன் ரணில்



மிஸ் இன்டர்நெஷனல் அழகிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படம் எடுத்துக் கொண்டுள்ளார். மேற்படி படத்தை அவர் தனது டுவிட் டர் பக்கத்திலும் பதிவேற்றம் செய்துள்ளார்.

அழகிகளுடனான சந் திப்பு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம் பெற்றது. மிஸஇன்டர்நெஷனல் அழகு ராணி போட்டி எதிர் வரும் மே மாதம் 30 ஆம் திகதி இலங்கையில் நடை பெறும் என எதிர்பார்க்கப்படு கினறது. இந்நிலையில், போட்டி யில் பங்குகொள்ளும் அழகி கள் தற்போது இலங்கைக்கு சுற்றுலா பயணத்தை மேற் கொண்டுள்ளனர்.

மேலும் இந்த அழகு ராணி களின் போட்டியில் இலங்கை அழகியும் பங்கேறகிறார் என் பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## பாதுகாப்பான பொருளாதாரத்தையுடைய நாடுகளின் பட்டியலில் இலங்கையும் ஒன்று

### உலக வங்கி சுட்டிக்காட்டு

உலகில் மிகவும் பாதுகாப் பான பொருளாதாரத்தையுடைய நாடுகளில் இலங்கையும் ஒன்று என உலக வங்கி அண்மை யில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் வறுமை நிலை தொடர்பான அறிக்கை வெளியிட்டு நிகழ்வில் இந்த விட யம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகில் மிகவும் பாதுகா ப்பான நாடுகளில் இலங்கை யும் ஒன்று. பல்வேறு தொழிற் றுறை போட்டிகளின் மத்தி யில் பிராந்தியத்தில் முக்கிய தொரு நாடாக திகழும் இல க்கை இலங்கை அடைந்து கொள்வதற்குஎவ்வளவோ தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

1977 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னருமான காலப் பகுதியில் இலங்கையானது உலகில் மிகவும் சுதந்திர மான பொருளாதார வர்த்தக த்தை உடைய நாடாக மாற் றமடைந்தது. 1990 களில் இது மேலும் வலுவாக்கப்பட்டது.

மேலும் தற்காப்பில் ஈடு படும் இலங்கையின் முயற்சி போட்டிகள் நிறைந்துள்ள தொழில் முயற்சிகளிடையே இலங்கையை முன்னேற விடாது. ஒரே இடத்தில் நிறுத்தி விடும் அபாயம் உள்ளது.

அத்துடன் இலங்கை உற் பத்தித்துறையில் பல் பரி மானங்களில் விரிவாக்கம் அடைய வேண்டிய தேவை யுள்ளது என்றும் வலியுறுத்த ப்பட்டுள்ளது. (3)

# யாழில் வெடித்தது இந்துக்களின் போர் வலுவான நிலையில் யாழ். இந்து





இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் – கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் நேற்றைய முதல் நாள் முடிவில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

யாழில் இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி இரசிகர்களின் அமோக வரவேற்புடன் கோலாகலமாக ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு இந்துக் கல்லூரி அணி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அணி 57 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 296 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ் இந்துக் கல்லூரி அணி சார்பாக துவாரகன் 57, கணேஸ்வரன் 47, நில்கேஷ் 43, சிவலுக்சன் 39 ஓட்டங்களை எடுத்தனர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடி வரும் கொழும்பு இந்துக் கல்லூரி நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை எடுத்தது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, கொழும்பு இந்துக் கல்லூரி அணியைவிட 148 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (கு)

## சர்வதேச போட்டிகளில் இருந்து சயீட் அஜ்மல் ஓய்வு



திறமையுடன் செயல்பட முடியவில்லை எனில் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவேன் என பாகிஸ்தான் சுழற்பந்துவீச்சாளர் சயீட் அஜ்மல் தெரிவித்துள்ளார்.

சந்தேகத்திற்கு உரிய வகையில் பந்து வீசுவதாக கூறி பாகிஸ்தான் சுழற்பந்துவீச்சாளரான சயீட அஜ்மலுக்கு ஓராண்டு தடை விதிக்கப்பட்டது.இந்த நிலையில் கடந்த ஆண்டு நடைபெற்ற உலக கிண்ணப் போட்டி தொடங்குவதற்கு ஒரு வார காலம் இருக்கும்போது தடையை நீக்கினர்.

ஆனால் சர்வதேச போட்டிகளில் அனைவரும் எதிர்கொள்ள அச்சப்படும் தனது பழைய பந்துவீச்சை கொண்டுவர அவர் கடுமையாக போராட வேண்டி வந்தது.

இதனிடையே அவர் ஓப் ஸ்பின் பந்துவீச்சில் புதிய உத்தியை பயிற்சி செய்து சர்வதேச போட்டிகளில் விளையாட தயாராகியுள்ளார்.

இந்த புதிய உத்தி தமக்கு கைகொடுக்கவில்லை எனில் சர்வதேச போட்டிகளில் இருந்து தாம் விலக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# ஆரம்பமானது வீரர்களின் போர் மகாஜன கல்லூரி சிறப்பாட்டம்





சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 95 ஓட்டங்களால் முன்னிலை பெற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது. .

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி – தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அவ் அணி தமது முதல் இன்னிங்சில் 33 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சயந்தன் 62, சாருஜன் 38 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி சார்பில் தினேஷ் 9 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், சுஜீவன் 3 ஓவர்கள் பந்துவீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், லக்ஷ்மன் 4 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், கனிஷ்ரன் 7 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 68 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களைஎடுத்தது.

துடுப்பாட்டத்தில் பிரணவன் ஆட்டமிழக்காது 61, சுஜீவன் 46, லக்ஷ்மன் 36, புருசோத்தமன் 26 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தா சார்பில் கதியோன் 24 ஓவர்கள் பந்து வீசி 60 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும், சஞ்ஜயன் 13 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் மகாஜனக் கல்லூரி, ஸ்கந்தவரோதய அணியை விட 95 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (கு)


மணிவிழா வாழ்த்து



" பொன்மனச்செம்மல்"
" மனிதநேய ஈகையாளன் "
" கல்விக் காருண்யன் "
எனும் கௌரவ பட்டங்களைப் பெற்ற
உயர்திரு.
E.S.P. நாகரத்தினம்
அவர்கள்

ஊர் நடுவில் ஊருணியாய்
கார்மழையாய்
பார் போற்றும் பண்புடையோய்
பள்ளிகளில் கல்வியோங்கப்
பரிவுடனே உதவி நல்கும்
சீரோங்கு நாகரத்தினச்
செம்மலே வாழி வாழி!

வாழ்த்துவோர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி
பாடசாலைச் சமூகம்

(C-3788)

# கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு யாழில் ஆரம்பம்



ஊழியர் சேமலாப நிதியத்தின் 30 வீத கொடுப்பனவு வழங்கும் நிகழ்வினை தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர நேற்றையதினம் யாழ். மாவ ட்டத்தில் அமைந்துள்ள பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் ஆரம்பித்து வைத்தார். வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோயினி ஜெகதீஸ்வரன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தொழில் திணைக்களத்தின் தொழிலாளர் நாயகம் திருமதி எம்.டி.சி. அமரதுங்கா, யாழ்.மாவட்ட மேலதிக அரசஅதிபர் பி.செந்தில் நந்தனன், அமைச்சர் ரவீந்திர சமரவீரவின் பாரியார் உட்பட வடமாகாண தொழில் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகர்)

# சஜின்வாஸ் குணவர்த்தனவின் யானை உடவலவவுக்கு மாற்றம்


வெளிவிவகார அமைச்சின் முன்னாள் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன, பல வருடங்கள் வைத்திருந்த யானை ஒன்றை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டனர்.

இந்த யானை கடந்த 15 வருடங்களாக அமபலாங்கொட, ஹிரேவத்த விகாரையில், யானை பாகன் ஒருவரை கொண்டு சஜின்வாஸ் குணவர்த்தன பாராமரித்து வந்துள்ளார்.

எனினும் நேற்று அங்கு சென்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், யானை லொறி ஒன்றில் ஏற்றி, எடுத்துச் சென்று அதனை உடவலவ யானை காப்பகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, யானை வளர்கக அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை என்பதால், அதனை எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## 07 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
1968.08.11

இறப்பு
2009.03.09

### பூமிராசா லபிதா

(ஆசிரியர்)

திதி: 20.02.2016

கண்ணீருக்கு தடை போட்டது போல
உம் நினைவுகளுக்கு தடை போட முடியவில்லை
நினைவுகளை மட்டும் நிறையவே தந்து விட்டு
நீர் எங்கு சென்றீரோ

(3547)

இல.01,
பாலிநகர், வவுனிக்குளம்.

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்.

## ஓராண்டு சிரார்த்த நிகழ்வும் நினைவஞ்சலியும்

மலர்வு
21.02.1946

உதிர்வு
02.03.2015



### அமரர் வைரமுத்து தனபாலசிங்கம்

(திதி. மாசிமாதம் பூர்வபக்க திரயோதசி)

பாசமலர் ஒன்று பாரைவிட்டு பறந்து ஆறிரு மாதங்களாயின- ஆனாலும்
மறையவில்லை உங்கள் அன்புமுகம் நித்தமும் நினைக்கின்றோம்
நினைவுகளை- எங்களால் முடியவில்லை.

எமது குடும்பத் தலைவர் அவர்களின் ஓராண்டு திதி நிகழ்வு 20.02.2016 இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. எனவே அத்தருணம் இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

சாளம்பன்,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(சி-3781)

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.
021 326 3141

## இராசி பலன்

20.02.2016
(மாசி 08, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு,
திரயோதசி முன்னிரவு 11.14 மணிவரை
பூசம் பின்னிரவு 5.13 மணிவரை
சுபநேரம் 3.32-5.02 மணிவரை
இராகுகாலம் 9.32-11.02 மணிவரை
இராகிருஷ்ண பரமஹம்சர் பிறந்ததினம்
சனிப் பிரதேச விரதம்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூரி கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மூலம் | | சந் |
| புத சுக் | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உடன் பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், மாதர் நட்புண்டு.

**கும்பம்** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், தேக நலனில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகப் பெருமானை வழிபட வேண்டிய நாள், வெளியூர் பயணமொன்றால் சில செலவுகள் ஏற்படலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**மகரம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எதிர்பார்ப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்** உறவினர்களின் நலன்கருதி செலவுகள் ஏற்படலாம், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு** மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குற்றங்கண்டு பிடிக்கலாம், செலவுகள் அதிகமாகும் நாள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்** தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், தூரதேசத்திலிருந்து சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, செல்வநிலை உயரும் நாள், மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம் பெறலாம்.

# தமிழீழ அலங்கரிப்பு குறித்து புலனாய்வுத்துறை விசாரணை

(யாழ்ப்பாணம்)

ஈழ வாரியம்பதி ஸ்ரீ மீனாட்சி அம்மன் என்ற பெயரைக்கொண்டு அழைக்கப்படுவதால் தமிழீழ நிலவடிவில் அம்மனை அலங்கரித்தோம் என புலனாய்வுத்துறை அதிகாரிகளிடம் ஆலய நிர்வாகசபை மற்றும் உபயகாரர்கள் நேற்றையதினம் விளக்கமளித்துள்ளனர். இது தொடர்பாக தெரிய வருவதாவது,

சாவகச்சேரி சங்கத்தானை ஈழ வாரியம்பதி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழாவின் ஆறாம் நாள் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாலைநேரத் திருவிழாவின் போது அம்மன் தமிழீழ நிலவடிவில் அலங்கரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக தகவல் அறிந்த சாவகச்சேரி புலனாய்வுத்துறை அதிகாரிகள் நேற்றுக் காலை ஆலயத்திற்கு சென்று விசாரணைகளை நடத்தியிருந்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக ஆலய பரிபாலன சபை மற்றும் திருவிழா உபயகாரர்கள் எமக்கு எப்போதும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அலங்கரிக்கப்பட்ட வடிவத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறும் கூறினர். (இ-5)



## கருத்தரங்கத் தொடர்-1

பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் கருத்தரங்கத் தொடர்-1 என்ற இளையான்குட்டிமாறன் நாயனார் புராணம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பரிபாலன சபையின் தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கருத்துரைகளை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் வேல்நந்தகுமார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் சின்னராசா ரமணராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

## தீர்த்தமாடல்

மாசி மகா மகத்தை முன்னிட்டு வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமியின் தீர்த்தமாடல் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு பருத்தித்துறை கற்கோவளம் கடற்பரப்பில் நடைபெறவுள்ளது. (இ-5-19)

## பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் நாளை யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறையின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தச விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறையின் சட்ட மாணவர் சங்கம் மற்றும் சட்ட பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிரதம நீதியரசர் கா.ஸ்ரீபவன், கௌரவ விருந்தினர்களாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தவிசாளர் பேராசிரியர் பி.எஸ்.எம்.குணரத்தின, யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், யாழ்.மேன்முறையீட்டு நீதிமன்ற ஆணையாளர் (குடியியல் மேன்முறையீடு) திருமதி கனகா சிவபாதசுந்தரம் மற்றும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி மாதவ தென்னக்கோன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் தச விழாவின் ஞாபகார்த்தமாக மலர் வெளியீடு ஒன்றும் சட்ட மாணவர் சங்கத்தின் வருடாந்த செயற்பாடான நீதம் மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது. (இ-9)

### வீதிப் புனரமைப்புக்கென

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் 60 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(பொற்பதி)

வடக்கு மாகாண சபையில் இருந்து வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தனுக்கு வழங்கப்பட்ட நிதியில் இருந்து 30 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் இருந்த வீதியின் திருத்த வேலைகளுக்காக 60 இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி சந்தியில் இருந்து வெற்றிலைக்கேணி மருதடி வரைக்குமான தெற்கு பிரதான வீதித்திருத்தத்திற்கே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7 கிலோமீற்றர் நீளமுடைய குறித்த வீதியானது கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எந்தவொரு திருத்தமுமின்றி காணப்படுகின்றது.

மேலும் வீதியின் இரு மருங்கும் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றது.

இவ்வீதித் திருத்தம் தொடர்பாக வடமராட்சி கிழக்கு பிரதேச மக்களால் பலதரப்பட்ட அரசியல்வாதிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகளிடம் கோரிக்கைகள் விடப்பட்டன.

அம்மக்களின் கோரிக்கைகளுக்கு அமைவான இவ் வீதித்திருத்தத்திற்கு 60 இலட்சம் ரூபா நிதி இவ்வருடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் குறித்த வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வீதியின் இருமருங்கிலும் உள்ள பற்றைகள் வெட்டப்பட்டு வீதியானது கிரவல் இடப்பட்டு செப்பனிடப்படவுள்ளது.

இவ்வீதித் திருத்த வேலைகள் இன்னும் சில வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-5-64)

## கிராமங்களுக்கு சென்று நீரிழிவுப் பரிசோதனை

(சாவகச்சேரி-2)

யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையமானது இவ்வருடம் ஒவ்வொரு கிராமமாகச் சென்று நீரிழிவு பரிசோதனைகளை நடத்த திட்டமிட்டுள்ளது.

அந்த வகையில் இப்பரிசோதனைகளை நடத்த விரும்பும் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இது தொடர்பான வேண்டுகோளை கடிதமூலம் தத்தமது பிரதேசத்தில் அமைந்துள்ள சுகாதார வைத்திய பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.பிராந்திய சுகாதர சேவை பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5-88)

## வைரவிழா நிகழ்வு இன்றும் நாளையும்

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் வைரவிழா இன்றும் நாளையும். சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் ப.பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகள் இரண்டு நாட்களும் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இதற்கமைய இன்று சனிக்கிழமை நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கழக ஸ்தாபக கால உறுப்பினர் மா.கிருஸ்ணானந்தன், திருமதி கி. தாட்சாயினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி தி.அர்ச்சுனா கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெயமாலினி ரோபேட் யூலியன், வட்டு கிழக்கு கிராம சேவையாளர் செல்வி. பா.கோபிகா, சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோவில் பரிபாலன சபைத் தலைவர் பூ. சிவகுமாரன், கழக போசகர் வே.பரந்தாமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகமுன்னாள்துணைவேந்தரும் சமூகவியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் என்.சண்முகலிங்கன், திருமதி ச.கௌரி ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக சுழிபுரம் பிரதேச சபை செயலாளர் திருமதி ச. குணவதி கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக கழக முன்னாள் உறுப்பினரும் ஓய்வு பெற்றவங்கியாளருமானது.கோணேசநாதன், சித்தன்கேணி கிராமசேவையாளர் என்.சர்வானந்தன், சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் கோவில் பரிபாலன சபைத் தலைவர் தி.இராஜகுமார், கழக போசகர் க.ஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-17)

## வீதியில் கழிவுகள் வீசப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு; துர்நாற்றம்

(சாவகச்சேரி-2)

சாவகச்சேரியில் இருந்து தனங்கிளப்பு நோக்கி செல்லும் வீதியில் உள்ள கண்ணாடிபுட்டி இந்து மயானத்தை அண்மித்த பகுதியில் வீசப்பட்டுவரும் கழிவுகளால் அவ்விடத்தில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிகளவில் கோழி இறைச்சிக் கழிவுகள் வீசப்படுகின்றன.

இத்தகைய செயற்பாட்டால் அவ்விடம் எந்நேரமும் துர்நாற்றம் வீசக்கூடிய இடமாக மாறி வருகிறது.

கழிவு பொருட்கள் பகல்வேளைகளில் கொட்டப்படாது இரவுவேளைகளிலே அதிகம் கொட்டப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக சாவகச்சேரி நகராட்சி மன்றத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது கோழி இறைச்சிக் கழிவுகள் பெரும்பாலும் இரவு நேரங்களில் இவ்விடத்தில் வீசப்பட்டு வருகிறது.

அக்கழிவுகளை இடைவிட்டுத்தான் அகற்றி வருகின்றோம். மீளவும் அவ்விடத்தில் கழிவுகள் சேர்க்கப்பட்டால் 021 227 0806 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-88)




## திருமஞ்சத் திருவிழா

(சித்தன்கேணி)

சங்கானை நிகரை ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ திருமஞ்சத் திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மாலை திருமஞ்சத் திருவிழா இடம்பெறவுள்ளது. (இ-5-17)

# ஊழியர் சேமலாப நிதியத்தின் 30 வீத கொடுப்பனவை இனி யாழில் பெறலாம்

## மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் தெரிவிப்பு

ஊழியர் சேமலாப நிதியத்தின் 30 வீத கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு இனிவரும் காலங்களில் யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதித்தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க முடியும் என வடமாகாணபிரதித்தொழில்ஆணையாளர் திருமதி நீலலோயினி ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தின் 30 வீத கொடுப்பனவை வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் ஊழியர் சேமலாப நிதியத்தின் 30 வீத கொடுப்பனவினை பெறுவதற்கு எமது தலைமை காரியாலயத்தில் விண்ணப்பித்து அதற்கான படிவங்களை பெற்று இது வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்காதவர்கள் இனி யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள வடபிராந்தியதொழில்திணைக்களத்தில் சமர்ப்பிக்க முடியும் .


அத்துடன் ஊழியர் சேமலாப நிதியத்தின் 30 வீத கொடுப்பவை பெறுவதற்கு புதிதாக விண்ணப்பிக்க விரும்புகின்றவர்களும் எமது அலுவலகத்திற்குசமுகமளித்து விண்ணப்பங்களைபெற்றுக்கொள்ள முடியும். இக் கொடுப்பனவுகளை வீடமைப்பு மற்றும் மருத்துவக் காரணிகளுக்காக மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

வீடமைப்பு தொடர்பாக 30 வீத நன்மைகளை அவருக்கு சொந்தமான இடத்தில் வீடு ஒன்றை கட்டுதல், வீடு கட்டுவதற்கு இடத்தினை கொள்வனவு செய்தல், வீடு ஒன்றை கொள்வனவு செய்தல், வீடமைப்பதற்கான ஆதனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கான ஈட்டை அடைத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றில் இருந்து பெற்ற வீட்டுக் கடனின் மிகுதியை செலுத்தி முடிப்பதற்கான காரணங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்ததாக மருத்துவ சிகிச்சை தொடர்பில் 30 வீத நன்மைகளை பைபாஸ் அல்லாத இருதய சத்திரசிகிச்சை, இருதய பைபாஸ் சத்திரசிகிச்சை, சிறுநீரக மாற்று அல்லது அது தொடர்பான சத்திர சிகிச்சை, சிசேரியன் சத்திர சிகிச்சை, விபத்தில் அகப்பட்டு அதன் காரணமாக 14 நாட்களுக்கு அதிகமான காலத்துக்கு வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டிருந்தால் குறித்த நிதியத்தினை பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்குறித்த காரணங்களுக்காக மீளப் பெறக்கூடிய ஆகக் கூடிய தொகையாக இரண்டு மில்லியன் ரூபாய்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒருவரது தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிருக்கும்தொகையின் ஒரு பகுதியை மீளப் பெறும் அங்கத்தவருக்கு அவ்வாறு மீளப்பெறும் தினத்தில் இருந்து 10 வருடகாலம் முடிவடைந்த பின்னரே அவ்வேற்பாடுகளின் கீழ் அதே கணக்கிலிருந்து வைப்பிலிருக்கும் தொகையின் 30 சதவீதத்தினை இரண்டாவது தடவை வீடமைப்பு அல்லது மருத்துவ சிகிச்சைகளுக்காக பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# பூசணிக்கொடிகள் நாசம்; சந்தேகநபர் கைதானார்

கெற்பேலி மத்தியில் உள்ள செல்வரத்தினம் ஆனந்தகுமார் என்பவரது தோட்டத்தில் நடப்பட்ட பூசணிக் கொடிகளை பிடுங்கி எறிந்ததாக சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவர் நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 13ஆம் திகதி மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக தோட்ட உரிமையாளரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் இது தொடர்பில் கொடிகாமம்பொலீஸாரினால் எந்தவொருநடவடிக்கையும்எடுக்கப்படவில்லை.

இதனால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்ட பின்னரே அதே இடத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். தனிப்பட்ட பகை காரணமாகவே இச்சம்பவம் இடம் பெற்றது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-5-83)

## சுற்றுப்போட்டி

யாழ்.கிறீன் கிங்ஸ் சனசமூக நிலைய கழகத்தின் 51 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் கரப்பந்தாட்டம் மற்றும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளோம். இதில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு கழகங்கள் மற்றும் அணியினர் எதிர்வரும் 24.02.2016 புதன்கிழமைக்கு முன்னர் தங்களின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கரப்பந்தாட்டம்:* Over Game, 5 வீரர்கள்,
*மென்பந்தாட்டம்:* 5 ஓவர், 6 வீரர்கள்.
*போட்டிக் கட்டணம்:* 500 ரூபா
*தொடர்பு இலக்கம்:* 077 426 6915, 072 5713539

(சி-3785) **தலைவர்**

# வலைப்பந்தாட்ட போட்டி தீப ஜோதி வி.கழகம் வெற்றி



(பருத்தித்துறை)

நக்கீரன் விளையாட்டுக்கழகத்திற்கு எதிராக வலைப்பந்தாட்ட போட்டியில் தீப ஜோதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட பிரதேச மட்ட விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்ச்சி அல்வாய் நக்கீரன் விளையாட்டு கழகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் நடைபெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் நக்கீரன் விளையாட்டுக்கழகமும் தீப ஜோதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டது. இப் போட்டியில் 21:11 என்ற கணக்கில் தீப ஜோதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (கு)

# சொக்லேட் வடிவத்தில் போதைப் பொருள் மீட்பு

## பெண் ஒருவரும் கைது!

சொக்லேட் என்ற பெயரில் தருவிக்கப்பட்ட போதைப் பொருட்களினால் தயாரிக்கப்பட்ட மெஜிக் மஷ்ரூம் (Magic Masroom) எனப்படும் அபாயகர ஒளடத வகையொன்று வலான மோசடி தடுப்புப் பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் நாரஹேன்பிட்டி வீடொன்றிலிருந்து இவை கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சொக்லேட் போன்று அழகான மிளிரக் கூடிய கடதாசிகளில் பொதி செய்யப்பட்டு இவை சட்டவிரோதமாக தருவிக்கப்பட்டுள்ளன.

போதைப் பொருளுக்கு அடிமையான ஒருவரின் ஒத்துழைப்புடன் இவற்றை கொள்வனவுசெய்ய செல்வது போன்று பாசாங்கு செய்து இந்தப் போதைப்பொருள் கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த இந்த வீட்டிலிருந்த 21 வயது பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த மெஜிக் மஷ்ரூம் எனப்படும் அபாயகர ஒளடத பக்கெற்றுகள் 27 மற்றும் புரோபலீஸ் எனப்படும் அபாயகர ஒளடதம் அடங்கிய சிறிய போத்தல்கள் 42 மற்றும் கெனபீஸ் எனப்படும் கஞ்சா செடியினால் பெறப்படும் 16 ஹெஷ்குரூம் எனப்படும் பொருள் என்பன மீட்க்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து கிடைத்த தகவலின் பிரகாரம் இந்த போதை மருந்துகள் அமெரிக்காவில் இருந்து விமானம் மூலம் வரும் வெளிநாட்டு பெண் ஒருவரிடம் இருந்தே இவை கிடைப்பதாகவும் இவை சொக்லேட் போன்று தருவிக்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த அபாயகர ஒளடதம் குறித்து நன்கு தெரிந்தவர்கள் மத்தியில் இவை விற்கப்படுவதாகவும் இவற்றின் மொத்தப் பெறுமதி 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக நர ஹேன் பிட்டி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (இ)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:8<br>உயரம்: 5’10"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் PR<br>தொ.இ: B/5524 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 42 செவ் 1 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5561 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 52சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR<br>தொ.இ: B/5526 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 17செவ் 2 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில் : A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/5563 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 5<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: B/5527 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 56செவ் 12 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5564 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 23<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/5529 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 8<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>தொ.இ: G/5565 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## வங்கியில் கடனாகப் பெற்ற

# பணத்தை மீளச் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட பொதுமக்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வசிக்கின்ற பொது மக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போருக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்த மக்கள் வங்கியில் கடன் பெற்றவர்களை கடனைத்திருப்பிச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.வீடுகள் கட்டுவதற்கு மற்றும் சுய தொழில் முயற்சிக்குமாக கடனைப் பெற்ற 600இற்கு மேற்பட்டவர்கள் இறுதி யுத்தத்தின் போது அனைத்தையும் இழந்து அகதிகளாக இடம் பெயர்ந்து நலன் புரி முகாம்களில் இருந்து மீள்குடியேறியுள்ளனர் இந் நிலையில் மேற்படி வங்கியில் மீளச் செலுத்தப்படாது இருக்கின்ற மீதிக் கடன் பணத்தை மீளச் செலுத்தும்படியும் தவறும் பட்சத்தில்,நீதிமன்றம் ஊடாக சொத்துக்கள் பறிமுதல்செய்யப்படும் என மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய முகாமையாளரினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக துறைசார்ந்தவர்கள் கவனத்தில் கொண்டு தம்மைக் காப்பாற்றுமாறு உதவி கோரியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கடந்த 2008ஆம் ஆண்டிற்கு முன்னர் கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பொது மக்கள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பு செய்வதற்காகவும் தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்காகவும் 50 ஆயிரம் ரூபா முதல் 2இலட்சம் ரூபா வரை கிளிநொச்சி மாவட்டத்தில் அன்றைய காலப் பகுதியில் இயங்கிய மக்கள் வங்கியூடாககடன் பெற்றுசுய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டனர். அத்தோடு, மாதாந்தம் கடன் பணத்தையும் மீளச் செலுத்திவந்தனர்.

பின்னர் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது அனைத்தையும் இழந்து அகதிகளாக வவுனியா நலன் புரி முகாமில் தஞ்சம் அடைந்து 2009ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மீள் குடியேற்றப்பட்டனர்.

இன்றுவரை தமது வாழ்வாதாரத் தேவைகளுக்காக அல்லற்படும் மக்களிடம் மீதி செலுத்தப்படாது இருக்கும் கடனை உடன் செலுத்த வேண்டும் எனவும் இது தொடர்பாக எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல்10 மணிக்கு கிளிநொச்சி மக்கள் வங்கிக்கு சமூகம் தருமாறும் மக்கள் வங்கின் பிராந்திய முகாமையாளரினால் 600 இற்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யுத்தம் காரணமாக மக்கள் இழந்த சொத்துக்களுக்கு இன்னும் அரசாங்கத்தினால் நட்ட ஈடு வழங்கப்படாதுள்ள நிலையில்,மேற்படி அரச வங்கியானது கடனை மீளச் செலுத்த நிர்ப்பந்தித்துள்ளது. இது தம்மை மிகவும் பாதித்துள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்களும் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களும் இவ் விடயத்தில் கவனம் செலுத்தி அரசாங்கத்திற்குதெரியப்படுத்திகடன்பணத்தை தள்ளுபடி செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (2-3-15)

# தட்டுவன்கொட்டி கிராம மக்களுக்கு குடிநீர் விநியோக தாங்கி அன்பளிப்பு



(திருமுறிகண்டி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் தட்டுவன் கொட்டி கிராம மக்களின் குடிநீர் தேவையைக் கருத்திற்கொண்டு கொக்குவில் சத்தியசாயி மந்திர் நிலையத்தின் ஏற்பாட்டில் 5 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட நடமாடும் குடிநீர் விநியோக தாங்கியொன்று அன்பளிப்பாக அண்மையில் வழங்கப்பட்டது.

குறித்த கிராமத்தில் 102 குடும்பங்கள் வசித்து வருகின்றன. பெரும்பாலும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இம்மக்கள் அன்றாடம் குடிநீரைப் பெற்றுக்கொள்ள நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.

இவற்றைக் கருத்திற்கொண்டு வடபிராந்திய சத்தியசாயி நிறுவனத்தின் தலைவர் கே.பி.சிவநேசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி நீர்த்தாங்கி வழங்கப்பட்டதுடன் 98 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.(2-3-311)

## வடக்கு கிழக்கு மாகாணங்களில்

# நெல் வேளாண்மை காணி இடாப்பு மீளாய்வு செய்யும் பணி ஆரம்பம்

### மே மாதம் 30ஆம் திகதி வரை நடைபெறும்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 25 வருடங்களுக்குப் பின்னர் நெல் வேளாண்மை காணி இடாப்பு மீளாய்வு செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த மீளாய்வு எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி வரை நடைபெறும் என விவசாய அமைச்சின் நிர்வாகத்திலுள்ள கமத்தொழில் இலாகாவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணிகளின் சட்ட ரீதியான உரிமையாளரை அடையாளம் காணுதலும் நெல் வேளாண்மை செய்கை விஸ்தரிப்பை உறுதிப்படுத்துவதும் இதன் பிரதான நோக்கங்களாகுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் 2014ஆம் ஆண்டு இம் மீளாய்வு செய்யப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் 1992 ஆம் ஆண்டு இறுதியாக மீளாய்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்தம் காரணமாக காணி தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு இதன்மூலம் தீர்வு காண முடியும் என கமத்தொழில் இலாகாவினர் தெரிவித்துள்ளனர். (2-3-311)



கிளி.சிவநகர் அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ள மெய்வல்லுநர் திறனாய்வு போட்டியையொட்டி மரதன் ஓட்டப்போட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி சந்தை வளாகத்தில் ஆரம்பித்து உருத்திரபுரத்தில் நிறைவடைந்தது.இதில் வெற்றியீட்டியவருக்கு பரிசில் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

# வவுனியாவில் விவசாயக்கண்காட்சி இன்றுடன் நிறைவு

(திருமுறிகண்டி)

இலங்கை விவசாயக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டியும் வவுனியா விவசாயக் கல்லூரியின் 27 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டும் வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட விவசாயக் கண்காட்சி நேற்று முன்தினமும் நேற்றும் இன்றும் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் கண்காட்சி நடைபெறும்.

இக்கண்காட்சியை விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என அனைவரையும் கண்டு பயன்பெறுமாறும் அத்துடன் மரக்கன்றுகளையும் கொள்வனவு செய்ய முடியும் எனவும் வவுனியா விவசாயக் கல்லூரி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2-3-31)

# வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் சிறுமி கழுத்து நெரிக்கப்பட்டு கொலை

### வவுனியா திடீர் மரண விசாரணை அதிகாரி தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார் என வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் தெரிவித்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி தாயார் வேலைக்கும், சகோதரர்கள் பாடசாலைக்கும் சென்றிருந்த சமயம் வவு/விபுலானந்தா கல்லூரி மாணவியான கெ.ஹரிஸ்ணவி (வயது-13) என்பவர் பிற்பகல் 2.30 மாணவியளவில் தாயார், சகோதரர்கள் வந்த போது தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் மற்றும் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

வவுனியா வைத்தியசாலை நிபுணத்துவ சட்ட வைத்திய அதிகாரி ஜே.சி.சமரவீர கடமை நிமிர்த்தம் கொழும்பு சென்றிருந்தமையால் நேற்று முன்தினம் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சடலம் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் இம் மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் தெரிவிக்கையில்,

குறித்த மாணவி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். அவர் தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றவரிடம் இருந்து காப்பாற்ற முயன்றுள்ளார். இருப்பினும் வன்புணர்வின் பின் அவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு, அதன் பின் தூக்கில் போடப்பட்டுள்ளார். இதனால் இக் கொலை மற்றும் வன்புணர்வு தொடர்பான விசாரணை வவுனியா பெருங்குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், நீதிமன்றத்தின் துணையுடன் மேற்கொண்டு விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சடலம் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளை, சடலத்தை இறுதிக் கிரியையின் போது புதைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாணவியின் உடற்பாகங்கள் சில மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(2-3-281-250)

# செட்டிகுளம் வீதியில் யானை தாக்கியதில் வயோதிபர் பலி!

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளத்தில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வயோதிபரை யானை தாக்கியதில் அவர் மரணம் அடைந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

செட்டிகுளம் பகுதியில் நேற்று அதிகாலைவேளை வீதியில் பயணித்துக்கொண்டிருந்தபோதே இவ்வாறு யானை தாக்கி மரணமடைந்துள்ளார்.

வவுனியா, செட்டிகுளம், துடரிக்குளத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து அதிகாலை மேசன் வேலைக்கு கூலியாட்களைப் பிடிப்பதற்காக கிறிஸ்தவகுளத்திற்கு சென்ற சமயம் வீதியோரத்தில் நின்ற யானை பிரஸ்தாப வயோதிபரை தாக்கியது. இதில் துடரிக்குளத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தர்மலிங்கம் (வயது- 64) என்பவரே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பான விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டனர். (2-250)




# புதிய கட்டட திறப்பு விழாவும் மாணவர்கள் கௌரவிப்பும்

கிளி. புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் புதிய கட்டட திறப்பு விழாவும் புலமைப்பரிசில் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும்நேற்றுகாலை 9.30 மணியளவில் வித்தியாலய அதிபர் கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது.வடக்கு மாகாண சபையின் நிதியுதவியுடன் புதிதாக கட்டப்பட்ட பத்திற்கும் மேற்பட்ட வகுப்பறைகள் மற்றும் கலைவிழாநிகழ்வு மேடைகளுடன் அமையப்பெற்ற இப்புதிய கட்டட திறப்பு விழாவுக்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நாடாவை வெட்டி கட்டடத்தை திறந்து வைத்தார். (2-3-309)



முள்ளியவளை கிழக்கு சமுர்த்திப் பயனாளிகளினால் கடந்த 16ஆம் திகதி மு/முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆண் மாணவர்களிற்கான விடுதியின் சுற்றுப்புறம் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

காலை 8மணி முதல் நண்பகல் 12மணிவரை சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.இதில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கு பற்றியிருந்தனர். (படம்:-முள்ளியவளை செய்தியாளர்)

# துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒலுமடு

## விவசாயிகளிடமிருந்து நெல்கொள்வனவு ஆரம்பம்

(மல்லாவி)

**துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒலுமடு ஆகிய கமநல சேவை நிலையங்களுக்கு உட்பட்ட விவசாயிகளிடம் இருந்து நெல் சந்தைப்படுத்தும் சபையினால், நடப்பாண்டிற்குரிய காலபோக நெல் கொள்வனவு நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 25ஆம் திகதி நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக,நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் களஞ்சிய சாலைகளைப்பயன்படுத்தி மேற்படி கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கோட்டைகட்டிய குளத்திலுள்ள துணுக்காய் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் களஞ்சிய சாலையில் வைத்து ஒரு விவசாயியிடம் இருந்து2ஆயிரம் கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்யப்படுகிறது.

இதன் பிரகாரம் கீரிச்சம்பா நெல் ஒரு கிலோகிராம் 50 ரூபாவாகவும் சம்பா நெல் ஒரு கிலோகிராம் 41ரூபாவாகவும் நாடு நெல் ஒரு கிலோ கிராம் 38 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படுகிறது.

நெல்லைவிற்பனைசெய்யவிரும்பும் விவசாயிகள் அந்தந்த கமநல சேவை நிலையங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்களாக இருப்பதுடன் கோட்டைகட்டிய குளம் களஞ்சிய சாலை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு முன் அனுமதியைப் பெற்றதன் பின்னர் நெல் மூடைகளைவாகனங்களில்ஏற்றிச் சென்று விற்பனை செய்யுமாறு அவர் அறிவித்துள்ளார். (2-3-15)




## கல்யாண வேலவர் அறநெறி முன்பள்ளிக்கு கழிப்பறை,விளையாட்டு முற்றம் அமையுங்கள்

### பெற்றோர் கோரிக்கை

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு-முள்ளியவளை முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள 50 இற்கும் மேற்பட்ட சிறார்களைக் கொண்டு இயங்கும் கல்யாண வேலவர் அறநெறி முன்பள்ளிக்கு சிறுவர் விளையாட்டு முற்றம், கழிப்பறை ஆகியவற்றை அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளிடமும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமும் கல்யாண வேலவர் ஆலய பரிபாலன சபையினரிடமும் முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் கள் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி முன்பள்ளியில் 50 இற்கும் மேற்பட்ட சிறார்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

சிறார்கள் மகிழ்வான செயற்பாட்டிற்கு விளையாட்டு முற்றம், விளையாட்டு உபகரணங்கள் இல்லாது இருப்பதால் சிறார்கள் தமது ஆரம்ப கல்வியைமகிழ்வானசூழலில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

இதனால் இவர்கள் மனதளவில் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் இம் மழலைகளின் பயன்பாட்டிற்கென ஒருகழிப்பறைகூட அமைத்துக்கொடுக்கப்படவில்லை.

இதனால் சிறுவயதிலேயே கழிப்பறையை பயன்படுத்தும் பழக்கத்தை கற்கும் வாய்ப்பையும் இழந்து விடுகின்றனர்.

அத்துடன் இச்சிறார்களுக்கு அப்பிரதேசத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் ஒருவரால் தளபாடங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளபோதிலும் அவையும் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு முன்பள்ளி கல்வி பகுதி அதிகாரிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்,முள்ளியவளை கல்யாண வேலவர் ஆலய பரிபாலன சபையினர் ஆகியோர் குறித்த முன்பள்ளியின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முன்வரவேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-310)

## பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவது தொடர்பான செயலமர்வு

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பெண்கள் விவகார திணைக்களத்தின் ஏற்பாட்டில் நீண்டகால அடிப்படையில் பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவது தொடர்பிலான செயலமர்வு அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது.

இந்த செயலமர்வில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இந்த செயலமர்வின் இறுதியில் இடம்பெறும் மாகாண மட்ட செயலமர்வின் தீர்மானங்கள் கொள்கை ஆவணமாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன், உதவிச்செயலாளர் திருமதி சுஜீவா, சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-3-281)

## பாடசாலை விடுதிகளில் தங்கியிருக்கும் ஆசிரியர்களின் கதவுகளை தட்டி அச்சுறுத்தல்

### கல்வி அமைச்சின் செயலாளரிடம் இலங்கை ஆசிரியர் சங்கம் முறையீடு

முழங்காவில் மகா வித்தியாலய ஆசிரியர்கள் தங்கியுள்ள விடுதிக்கு நள்ளிரவில் செல்லும் படையினர் கதவுகளை தட்டி அச்சுறுத்துகின்றனர்.

இதனை உடனடியாக தடுத்து நிறுத்தி ஆசிரியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாணக் கல்வியமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் கல்வியமைச்சின் செயலாளரிடமும் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வன்னிப் பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற பல ஆசிரியர்கள் அங்குள்ள விடுதிகளில் தங்கியிருந்து தமது அர்ப்பணிப்பான சேவையைச் செய்து வருகின்றனர். அதிலும் அநேக ஆசிரியர்கள் பெண்களாகும்.

இவர்கள் தங்கியுள்ள விடுதிகள் இரவு நேரங்களில் தட்டப்பட்டு அங்குள்ள ஆசிரியர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். இத்தகைய சம்பவம் முழங்காவில் மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த பெண் ஆசிரியர்களின் விடுதியில் இடம் பெற்றுள்ளது. இந்த விடுதிக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்திருப்பதாகவும் இராணுவத்தினரே இத்தகைய செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. வன்னிப் பிரதேசம் தவிர்ந்த வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் தமது குழந்தைகளையும், உறவுகளையும் விட்டு விட்டு விடுதிகளில் தங்கியிருந்து தமது சேவையை ஆற்றிவரும் நிலையில் இத்தகைய சம்பவங்கள் அவ்வாசிரியர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இதனை உடனடியாக தடுத்து நிறுத்தி, ஆசிரியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வட மாகாணக் கல்வி அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் கல்வி அமைச்சு செயலாளரிடமும் முறையிட்டுள்ளார். (3-2-4)

## மன்னார் மாந்தை மனித புதைகுழியின் அருகிலுள்ள கிணற்றை தோண்ட உத்தரவு

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை பகுதியில் மனித புதைகுழி காணப்பட்ட இடத்திற்கு அருகில் அடையாளம் காணப்பட்ட கிணற்றை தோண்டும் பணியை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆ.கி.அலெக்ஸ்ராஜா நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி காணப்பட்ட இடத்திற்கு அருகில் கிணறு ஒன்று இருப்பதாகவும் அதனை சோதனையிடுமாறு காணாமற்போனவர்கள் சார்பாக வாதாடிய சட்டத்தரணிகள் மன்றில் விண்ணப்பம் செய்திருந்தனர்.

அதற்கமைய நீதவான் உத்தரவின் பேரில் அடையாளம் காணப்பட்ட குறித்த கிணறு நேற்றையதினம் மன்னார் நீதவான் முன்னிலையில் தோண்டுவதற்கான ஆயத்த நிலை தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது, மன்னார் நீதிமன்றத்தில் ஆஜரான மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அடையாளம் காணப்பட்ட குறித்த கிணற்றைச் சுற்றி மழை நீர் தேங்கி நிற்பதாகவும், இதனால் குறித்த கிணற்றை தோண்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வரட்சியான காலத்தில் தோண்ட முடியும் என பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.



இதற்கமைய, விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் ஆ.கி.அலெக்ஸ்ராஜா குறித்த கிணற்றை வரட்சியான காலப்பகுதியில் தோண்டும் வகையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4,5,6 ஆம் திகதிகளில் தோண்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த விசாரணைகளின் போது, காணாமற்போனவர்கள் சார்பாக கொழும்பில் இருந்து சட்டத்தரணிகளான ஜீ.ராஜ குலேந்திரம், வி.எஸ். நிரஞ்சன், மன்னார் சட்டத்தரணிகள் சங்கம் சார்பாக சட்டத்தரணிகளான எம்.சபூர்தீன், பிரிமூஸ் சிராய்வா, லோகு ஆகியோர் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர். இதே வேளை, மன்னார் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக நில அளவை திணைக்கள அதிகாரிகள், கிராம அலுவலகர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோரும் வருகை தந்திருந்தனர். அத்துடன், மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி காணப்பட்ட இடத்திற்கு அருகில் கண்டு பிடிக்கப் பட்ட கிணற்றை நேற் றைய தினம் பிற்பகல் ஒரு மணியளவில் மன் னார் நீதவான் முன்னி லையில் பார்வையிட்டுள்ளனர். (2-9)

## யுத்தத்தால் சொத்துக்களை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு ஆவணங்கள் பரிசீலிப்பு



### கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது








யுத்தத்தால உயிர், சொத்துக்கள் என்பவற்றை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான நடமாடும் சேவை நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது. இந்நடமாடும்சேவையில் உயிர்கள், அங்கங்கள், சொத்துக்கள் ஆகியவற்றை இழந்தவர்களுக்கு நஷ்டஈட்டினை வழங்குவதற்கான ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. கடந்த காலங்களில் குறித்த நஷ்டஈடுகளை பெற்று கொள்வதற்கு மக்கள் புனர்வாழ்வு அதிகார சபையிடம் விண்ணப்பித்திருந்தனர். குறித்த விண்ணப்பங்களை விண்ணப்பித்தவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 600 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதுடன், மேலதிக ஆவணங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன. தொடர்ந்து விரைவில் இவர்களுக்கான நஷ்டஈடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அங்கு வருகை தந்திருந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த நடமாடும் சேவையினை புனர்வாழ்வு அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது. இந்நடமாடும் சேவையில் அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம்,பிரதேச செயலாளர்கள், புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் உள்ளிட்டபலர் கலந்து கொண்டிருந்தனர். (3-2-15)


அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சதாசண்டியாகம் நிகழ்வின் போது... (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் ஆ.பரஞ்சோதி, கல்லூரியின் பழைய மாணவி திருமதி ரஜனி இந்திரகுமார் ஆகியோர் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குவதை படங்களில் காணலாம்.





யாழ். நடேஸ்வராக்கல்லூரி மற்றும் நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம் என்பவற்றின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்ற போது...





உரும்பிராய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராசா மற்றும் உரும்பிராய் வடக்கு கிராம சேவையாளர் சி.எழிலரசன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.







கரவெட்டி கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் திருமதி ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ். அகிலதாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)



இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாண வர் சங்கத்தினால் வெளி யிடப்பட்ட தமிழ், சம யம் சார்ந்த கணேசம் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீட்டின் போது நூலாசிரியர் திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை கௌர விக்கப்பட்டார்.

## நிகழ்வின் நிழல்கள்

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—81

## எளிய தொழில்நுட்பங்களின் கண்டுபிடிப்புக்களின் அவசியம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 78

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

அறிவின் திறமையின் இருப்பிடம் நாம் வாழுகின்றபூமி. அதிலும் மனிதவளம் மிக்க எமது பிரதேசம் ஒருகாலத்தில் பல்வகை விற்பன்னர்களைக் கொண்டிருந்ததும் அதனால் தமிழரின் இருப்பு என்பது பல்துறைகளில் பல அமைச்சுக்களில் சிறப்புடனிருந்தமையையும் நாம் அறிந்து கொள்ளலாம். தற்போதும் அதற்கு குறைவின்றி எம்மக்கள் பல துறைகளில் சிறந்து விளங்குகின்றதனை நாம் அறியலாம். ஆனாலும் எமக்கு தேவையான எளிய தொழில்நுட்பங்களை நாமே கண்டுபிடிப்பதற்கான காலம் நெருங்கி வருகின்றமையை இது சுட்டி நிற்கின்றது.

இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் மிகவும் எளிய தொழில் நுட்பங்களுடன் பலவகையான பொருட்கள் தற்போது எமது பிரதேசத்தை நிரப்பியிருக்கின்றதை நாமெல்லோரும் அறிவோம். குறிப்பாக ஒவ்வொருவரது வீட்டிலும் சீன தயாரிப்பில் ஏறக்குறைய 75 சதவீதமான பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. நாம் பாவிக்கும் செல்லிட தொலைபேசியிலிருந்து சமையலறை சாதனங்கள் வரை சீன தயாரிப்புக்களே முன்னிலையில் இருக்கின்றன.




அந்தளவிற்கு சீன மக்களின் அர்ப்பணிப்பும் அவர்களது தொழிற்றுறையும் மிகவும் விரைவாக வளர்ச்சியடைந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக சீனாவில் கூலித்தொழிலாளர்களை இலகுவாக பெற்றுக் கொள்ளலாம் என்பதனால் சீனாவை நோக்கி நோக்கியாவும் நகர்ந்திருப்பதனை காணலாம். அப்பிள் கணனியிலிருந்து அனைத்து எலக்ரோனிக் சாதனங்களனைத்தும் சீனத் தயாரிப்பாக இருப்பதையும் உலக சந்தையில் மலிவான பொருட்களாக அவை பரந்துபட்டு இருப்பதனையும் நாம் காணலாம்.

எம்மவர்களும் இதேபோன்று எலக்ரோனிக் தொழில்நுட்பத்தினை அனைத்து பயன்பாட்டிற்கும் உள்வாங்குகின்ற காலத்தை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

வட பகுதியில் உள்ள பொறியியல், தொழில்நுட்ப, விஞ்ஞான மற்றும் ஏனைய பீடங்கள் இதற்குள் உள்வாங்கப்படல் அவசியமாகின்றது. இந்த பீடங்களில் எளிய தொழில்நுட்பத்துடனான கருவிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டியதன் அவசியமும் அதனை நாம் பரவலாக பயன்படுத்த வேண்டியதன் தேவையும் பலராலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. க.பொ.த. உயர்தரத்தில் இதற்காக தொழில்நுட்ப பிரிவு ஆரம்பிக்கப்பட்டு முதலாவது தொகுதி மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு இவ்வருடம் உள்வாங்கப்பட இருக்கும் நிலையில் இந்த மாணவர்களுக்கு தொழில் நுட்பத்துறையில் புத்தாக்கங்களை செய்வதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அண்மையில் பரவலாக இலத்திரனியல் ஊடகங்களில் செய்தியாக வெளிவந்திருக்கும் நெல் அறுவடை செய்யும் இயந்திரமொன்றினை கிளிநொச்சி இளைஞன் கண்டுபிடித்துள்ளார்.

இவ்வகையான இயந்திரத்தினை அதனை பயன்படுத்தும் வழிபற்றி இதற்கு முன்னர் முகப்புத்தகத்திலும் இதுபோன்றதொரு இயந்திரத்தை ஒருவர் உருவாக்கி பயன்படுத்தியிருந்தார்.



இப்போது கிளிநொச்சி கரடிப்போக்குச்சந்தியில் உருத்திரபுரம் செல்லும் வீதியில் கே.கே.கே. பவிசன் வெல்டிங் வேக்சொப் வைத்திருக்கும் காண்டீபன் என்னும் இளைஞரே இந்த இலகுவாக நெல் அறுவடைசெய்யும் இயந்திரத்தை பல தோல்விகளுக்கு பின்னர் உருவாக்கியிருக்கின்றார்.

இவரது பரீட்சார்த்த முயற்சியும் வெற்றியளித்திருப்பதாக அறியக் கிடைக்கின்றது. குறைந்தளவு நிலத்தில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் இந்த இயந்திரத்தை இலகுவாக பயன்படுத்த முடியும் என அறியக்கிடைக்கின்றது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலபோக நெல் அறுவடையின் போது விவசாயிகள் இயந்திரம் மூலம் அறுவடை செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு ரூபா 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையில் செலவு செய்கின்றனர். இந்த பணத்தை பெற்றுக் கொள்வதற்கும் அரிவு வெட்டும் இயந்திரத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கும் பலர் திண்டாடுகின்றனர். இந்நிலையில் காண்டீபன் என்னும் இளைஞனின் இந்த முயற்சியை அனைவரும் பாராட்டவேண்டும். சாதாரண புல்வெட்டும் இயந்திரத்தைக் கொண்டு அதில் மாற்றங்களைச் செய்து நெல் அறுவடைக்கு ஏற்றவாறு இயந்திரத்தை மாற்றியமைத்திருக்கின்றார்.

இந்த இயந்திரத்தை உருவாக்க ஆறு தடவைகள் முயற்சியெடுத்தும் அது தோல்வி கண்ட நிலையில் விடாமுயற்சியாக ஏழாவது தடவை இந்த இயந்திரத்தை உருவாக்கியதாக காண்டீபன் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த முயற்சிக்கு நண்பனொருவர் தூண்டுதலாகவும் இருந்திருக்கின்றார்.

நல்ல நட்பின் ஆழம் எதையும் செய்யத்தூண்டும் என்பதற்கு இதுவும் ஒரு நல்ல உதாரணம். புல்லு வெட்டும் இயந்திரம் தற்போது நெல் அருவிவெட்டும் இயந்திரமாக உருவெடுத்திருக்கின்றது. காண்டீபன் என்பவரது குடும்பம் சிறிய குடும்பமாகவுள்ளதுடன் மேற்குறிப்பிட்ட இடத்திலேயே அவர் குடும்பத்துடன் வசித்தும் வருகின்றார். வருமானத்திற்காக வெல்டிங் கடையை நடத்திவரும் இவரினது நண்பன் தினேஷ் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரின் உதவியுடன் இந்த முயற்சிக்குள் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஒருபுல்வெட்டும் இயந்திரம் 16-18 ஆயிரம் ரூபாவிற்கு கிடைக்கும் எனவும் இந்த அருவிவெட்டும் இயந்திரத்தை தயாரிக்க மேலும் 8ஆயிரம் ரூபா தேவையெனவும் ஆக மொத்தத்தில் 25-26 ஆயிரம் ரூபாவுடன் அருவி வெட்டும் இயந்திரத்தை உருவாக்கி விடலாம் என்கின்றார். இந்த கண்டுபிடிப்பு பல விவசாயிகளுக்கு பயன்படும் என்பதில் சந்தேகமில்லை. இதனைத் தொடர்ந்து அறுவடை செய்தவற்றை நெல்மணிகளாக்கும் இயந்திரத்தை கண்டுபிடிப்பதில் அக்கறையுடன் ஈடுபட்டிருக்கின்றார்.

இப்போது வடிவமைக்கப்பட்ட அருவி வெட்டும் இயந்திரத்தை பயன்படுத்தி ஒரு ஏக்கர் நிலத்தை அறுவடை செய்ய இரண்டு லீற்றர் பெற்றோல் போதுமானதாகும்.

இதன் மூலம் நெல் அறுவடை செய்யும் செலவினையும் குறைக்க முடியும்.

எம்மவர்களின் கண்டுபிடிப்புக்களுக்கான சரியான வழிகாட்டல்களும் அவர்களுக்கான பாராட்டுதல்களும் அவ்வப்போது அவர்களை ஊக்கப்படுத்த செய்தல் வேண்டும்.

இளைஞர்களின் புத்திசாலித்தனத்தை முறையான நேர்வழியில் பயன்படுத்துவதற்கான கட்டமைப்புக்கள் வடபகுதியில் வேண்டும்.

இவ்வாறான புத்தாக்கங்களுக்கு மதிப்பளித்து அவர்களுக்கான வசதி வாய்ப்புக்களை செய்து கொடுத்தால் இன்னும் இதுபோன்ற கண்டுபிடிப்புக்கள் பலவற்றை வடபகுதி எதிர்பார்த்திருக்கலாம்.

தேசத்தின் தூண்களாக இளைஞர்களையே குறித்துக் காட்டிய பல பெரியோர்களின் மறைந்த அப்துல்கலாம் இளைஞர்களே தேசத்து அபிவிருத்தியின் கண்கள் எனக் குறிப்பிட்டுமுள்ளார். ஆக்கபூர்வமான இவ்வாறான முயற்சிகளை எம்மினிய உறவுகளுடன் சேர்ந்து எழுதும் இக்கைகளும் வாழ்த்துகின்றன.

பொருளாதார நிலையினால் பலமுயற்சிகள் தடைப்பட்டுள்ளதாக குறிப்பிடும் காண்டீபன் போன்ற இளைஞர்களை இனி வருங்கால விஞ்ஞானிகளை உருவாக்க அவர்களுக்கு பக்கபலமாக இருக்க எம்மினிய உறவுகள் உங்களை விரும்பியழைக்கின்றோம். ஊக்கமது கைவிடேல்.

# உயிரைப் பணயம் வைத்து பயணம் செய்யும் மாணவர்கள்




நேபாளத்தில் பாடசாலைக்கு செல்வதற்காக மிகுந்த ஆபத்தான முறையில் ஆற்றை கடக்கும் சிறுவர்களின் நிலை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையில் அமைந்துள்ள மலைப் பிரதேசம் தான் நேபாளம்.சுற்றுலாவுக்கு பெயர் பெற்ற இந்நாட்டில் கல்விக்காக உயிரை பணயம் வைத்து மாணவர்கள் பயணம் செய்வது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேபாளத்தின் பெனிகட் மாநிலத்தில் உள்ள திரிஷ் சுலி நதியின் அருகே அமைநதுள்ளது தயாங் கிராமம். வீதி வசதிகள் இல்லாத இந்த கிராமத்தை சேர்ந்த மக்கள் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டுமென்றால் திரிஷ் சுலி நதியின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள இரும்பு கம்பியை பிடித்தபடி தான் செல்லவேண்டும்.

பெரியவர்கள் மட்டுமல்லாது ஏராளமான மாணவர்களும் தங்களின் கல்விக்காக இத்தகைய ஆபத்தான பயணத்தை தினமும் மேற்கொள்கின்றனர்

நதியை கடப்பதற்காக இதைபோன்று பல்வேறு இடங்களிலும் இரும்பு கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு சில இடங்களில் பெட்டிகளை தாங்கும் வசதியுடன் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த 2010ஆம் ஆண்டு இவ்வாறு ஆபத்தான முறையில் நதியை கடக்க முயன்று 5 நபர்கள் இறந்துள்ளனர்.

இதைப் போன்று ஏராளமான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஏமனில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தற்கொலைப் படைத்தாக்குதல்

ஏமன் நாட்டில் நேற்று முன்தினம் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 14 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

ஏமனின் துறைமுக நகரமான ஏடனில்அரசுப்படைகளின் தலைமையகம் உள்ளது. மேலும் ஜனாதிபதி மனசூர் ஹாதிக்கு ஆதரவாக கிளர்ச்சியாளர்கள் மீது விமான தாக்குதல் நடத்திவரும் சவுதி தலைமையிலான கூட்டுப்படையும் அங்கு முகாமிட்டுள்ளது.

ஆனாலும், அங்கு ஐ.எஸ்., அல்கொய்தா ஆகிய தீவிரவாத அமைப்புகளின் வன்முறை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், ஏடனில் உள்ள ராஸ் அப்பாஸ் முகாமில் நேற்று முன்தினம் வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது, அங்கு இராணுவ சீருடையில் வந்த ஒரு நபர், தனது உடையில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளான். இதில், 14 பேர் உடல் சிதறி பலியாகினர். பலர் காயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏடன் ஆளுநரின் பாதுகாப்பு வாகனம் மீது அல்கொய்தா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய மறுநாள் இந்த சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

## துருக்கி எல்லைப் பகுதியை அடைந்த 5000 போராளிகள்

சிரியாவின் அஸாஸ் நகருககுச் செல்வதற்கான துருக்கி எல்லைப் பகுதியை, குறைந்தது 5,000 போராளிகள் கடந்துள்ளதாக, கண்கா ணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன. போராளிகள் இழப்பைச் சந்தித்துவரும் அஸாஸ் பிராந்தியத்துக்கு இவர்கள் செல்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

அலெப்போ மாகாணத்திலுள்ள அஸார் நகரில், குர்திஷ் படைகள் முன்னேற்றத்தை வெளிப்படுத்த, போராளிகள் தரப்பில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்நி லையிலேயே, கடந்த புதன்கிழமையன்று, புதிய போராளிகள், எல்லையைக் கடந்துள்ளனர். (இ)

## இங்கிலாந்து எல்லையில் பறக்க முயன்ற ரஷ்ய போர் விமானங்கள் சுற்றிவளைப்பு

இங்கிலாந்து விமான எல்லைப் பகுதிக்குள் நுழைய முயன்ற ரஷ்ய போர் விமானங்களை ஆர்.ஏ.எஃப் ஜெட் விமானம் இடைமறித்த சம்பவம் மீண்டும் அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வதற்காக இந்த ஜெட் விமானங்கள் இங்கிலாந்தின் கிழக்கு பகுதியில் உள்ள லின்கோல்ஷிர் நாட்டின் கோனிங்ஸ்பை ராயல் விமானப்படை தளத்தில் இருந்து புறப்பட்டு சென்றதாகக் கூறப்படுகிறது.

முன்னதாக கடந்த நவம்பர் மாதம் அட்லாண்டிக் கடல பகுதியில் பறந்து கொண்டிருந்த ரஷ்ய போர் விமானங்கள் தைபூன் ஜெட் விமானங்களால் இடைமறிக்கப் பட்டது.

இங்கிலாந்து எல்லைக்குள் பறக்க முயன்ற தாக கடந்த 12 மாதங்களில் மட்டும் ரஷ்ய போர் விமானங்கள் இதுவரை 6 முறை இடைமறிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு காரணங்களுக்காகவே போர் விமானங்கள் சுற்றி வந்ததாகவும், இங்கிலாந்து எல்லைப் பகுதிக்குள் நுழையவில்லை என்று செய்தி தொடர்பாளர் ஒருவர் மேலும் தெரிவித்தார். (இ)




## போராட்டத்தில் ஈடுபட்ட அரச ஊழியர்கள் 35 ஆயிரம் பேர் தமிழகத்தில் கைதாகினர்

(சென்னை)

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அரச ஊழியர்கள் நடத்திய போராட்டம் தீவிரமடைந்த நிலையில் தமிழகம் முழுவதும் 22 ஆயிரம் பெண் அரசு ஊழியர்கள் உட்பட மொத்தம் 35 ஆயிரம் ஊழியர்கள் கடந்த 17 ஆம் திகதி கைது செய்யபபட்டனர். மாலை 5 மணி அளவில் அனைவரும் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



# இன்னும் 100 ஆண்டுகளில் மனிதர்களின் வாழ்க்கை முறை எப்படி இருக்கும்?

அடுத்த 100 ஆண்டுகளில் மனிதர்களின் வாழ்க்கை முறை எப்படி இருக்கும் என அறிவியல் ஆய்வாளர்கள் சுவாரசிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.அடுத்த 100 ஆண்டுகளில் நமது வாழ்க்கை முறை முற்றிலும் மாறும் என தெரிவித்துள்ள அறிவியல் ஆய்வாளர்கள்,

நமது குடியிருப்புகளும், உணவும், தினசரி வாழ்க்கை முறையிலும் மாற்றம் ஏற்படும் என்றுள்ளனர். கடலுக்கடியில் குடியிருப்புகள் அமையலாம் என தெரிவித்துள்ள ஆய்வாளர்கள், வருங்காலங்களில் ஜனநெருக்கடியில் இருந்து தப்பிக்க இதுவே முறை எனவும் தெரிவித்துள்ளனர்.பிரித்தானியாவின் லண்டன் போன்ற பெருநகரங்களில் உலக மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப ஜனத்தொகை அதிகரிக்கலாம்,

அதுபோன்ற காலகட்டங்களில் பொதுமக்கள் குடியிருப்பு சிக்கலாக மாறும் என கூறும் ஆய்வாளர்கள் இதுபோன்ற திட்டங்கள் எதிர்காலத்தில் பயனைத் தரலாம் என்றுள்ளனர். (இ)

## ஷிகாவைத் தடுக்க 383 கோடி தேவை

(ஜெனிவா)

அமெரிக்கக் கண்டங்களில் உள்ள நாடுகளில் ஷிகா வைரஸ் நோய் வேகமாக பரவி வருகிறது. அங்கு மட்டும் 34 நாடுகளில் இந்த நோய் பரவி இருக்கிறது. இது தவிர, மேலும் 5 நாடுகளிலும் அவை பரவியுள்ளன.

இதைத் தடுக்க இதுவரை மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. எனவே, உலகம் முழுவதும் இந்த நோய் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஷிகா வைரஸ் நோயை தடுப்பது தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் தீவிர ஆலோசனை நடத்தி வந்தது. இப்போது நோயைத் தடுக்க 56 மில்லியன் டொலர் நிதி (383 கோடி ரூ.) தேவைப்படுகிறது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதில் 25 மில்லியன் டொலர் உலக சுகாதார நிறுவனத்திற்கும், மீதியுள்ள நிதி நோய் பரவி உள்ள 39 நாடுகளிலும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மேலும் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கவும் பயன்படுத்தப்படும் என்று உலக சுகாதார நிறுவன டைரக்டர் ஜெனரல் மார்க்கரெட் ஜான் தெரிவித்துள்ளார். (இ)

# நெடுஞ்சாலையில் பயங்கர விபத்து



## லொறி மீது பஸ் மோதியதில் 53 பேர் பலி

(அக்ரா)

**ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கானாவில் நிகழ்ந்த பயங்கர வீதி விபத்தில் 53 பேர் பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

வடக்குப் பகுதி நகரமான டாமேல் நோக்கி சென்ற அரசுப் பேருந்து, நெடுஞ்சாலையில் சென்ற போது தக்காளி ஏற்றி வந்த லொறியுடன் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில் பேருந்தின் முன்பகுதி கடுமையாக சேதமடைந்தது. பயணிகளில் பலர் இருக்கையுடன் நசுங்கி பலியாகி உள்ளனர்.

படுகாயங்களுடன் உயிருக்குப் போராடியவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்ப்டடு வருகிறது.

நேற்று முன்தினம் மாலை நடந்த இந்த விபத்தில் 53 பேர் பலியாகியிருப்பதாகவும், 23 பேர் உயிர் பிழைத்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)




# டொனால்ட் டிரம்ப் கிறிஸ்தவர் அல்ல

## போப் பிரான்சிஸ் சுட்டிக்காட்டு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஆதரவு திரட்டி வரும் டொனால்ட் டிரம்ப் ஒரு கிறிஸ்தவரே அல்லர் என உலகம் முழுவதும் வாழும் 120 கோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமை குருவான போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இஸ்லாமியர்களை அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதிக்கக்கூடாது என கூறி சர்ச்சையில் சிக்கினார் டொனால்ட் டிரம்ப், அமெரிக்கா-மெக்சிகோ இடையில் மதில் சுவர் கட்ட வேண்டும் எனவும் யோசனை தெரிவித்தார். அந்த கருத்திற்காக அமெரிக்காவில் மட்டும் அல்ல உலகம் முழுவதும் அவருக்கு எதிர்ப்பு அதிகரித்துவரும் நிலையில் மெக்சிகோவில் சுற்றுப்பயணம் செய்த போப் பிரான்சிஸ் வாடிகன் நகருக்கு விமானத்தில் திரும்பும் போது செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது, அண்மையில் டொனால்ட் டிரம்ப் அமெரிக்காவில் உள்ள குடியேறிகளை எல்லாம் வெளியேற்ற வேண்டும் என கூறியுள்ளாரே?, சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்கும் வகையில் அமெரிக்கா-மெக்சிகோ இடையில் மதில் சுவர் கட்டவேண்டும் எனவும் யோசனை கூறுகிறாரே?, ஒரு நல்ல கத்தோலிக்க கிறிஸ்தவர் இவருக்கு வாக்களிக்கலாமா? என்று போப் பிரான்சிஸிடம் ஒரு நிருபர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த போப், 'தன்னை ஒரு அரசியல்வாதி என்று டிரம்ப் கூறியுள்ளமைக்காக கடவுளுக்கு நன்றி. ஏனெனில், மனிதர்கள் அனைவரும்மே அரசியல் சிந்தனையுள்ள மிருகங்கள் (animal politicus) என தத்துவ மேதை அரிஸ்ரோட்டில் குறிப்பிட்டுள்ளார். நானும் ஒரு மனிதன்தான். டிரம்ப் கூறிய குடியேறிகள் தொடர்பான விவகாரத்தை உங்கள் (ஊடகம்) முடிவுக்கும் மக்களின் முடிவுக்குமே விட்டுவிடுகிறேன்.

அடுத்ததாக, இணைப்புப் பாலங்களை அமைப்பதை விடுத்து, தடுப்பு சுவர்களை கட்டுவதை மட்டுமே நினைப்பவர்கள் அவர்கள் எங்கிருந்தாலும் கிறிஸ்தவர்களே அல்லர். அவருக்கு வாக்களிக்க வேண்டுமா? கூடாதா? என்ற விவாதத்துக்குள் நான் இறங்க விரும்பவில்லை. ஆனால், அவர் தெரிவித்துள்ள கருத்தின் அடிப்படையில் டிரம்ப் ஒரு கிறிஸ்தவர் அல்லர் என்பதை மட்டும் என்னால் சொல்ல முடியும்' என கூறியுள்ளார். (இ)

## தெற்கு சூடானில் வன்முறை

# ஐ.நா.பாதுகாப்புக் குழு தாக்குதலில் 7 பேர் பலி



40 பேர் படுகாயம்

தெற்கு சூடானில் ஐ.நா.பாதுகா ப்புக் குழு நடத்திய தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், 40 பேர் படுகாயமடைந்ததாகவும், பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

தெற்கு சூடானின் மலக்கல் நகரின் வடகிழக்கு பகுதியில் தின்கா மற்றும் ஷில்லுக் என்ற இரண்டு சமுதாயத்தினரிடையே வன்முறை வெடித்தது. நேற்று முன்தினம் இரவு தொடங்கி இந்த கலவரம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த வன்முறை சம்பவத்திற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்த தோடு, வருத்தத்தையும் வெளிப்படுத்தினார். வன்முறையை தூண்டி விடும் அனைத்து அரசியல் கட்சியினரையும் அவர் எச்சரித்தார்.

தெற்கு சூடானில் தொடர்ந்து நடைபெற்று வரும் வன்முறை சம்பவங்களுக்கு இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். இலட்சக்கணக்கோர் வீடுகளை இழந்து வேறு இடங்களுக்கு சென்றுவிட்டனர். சுமார் 2 இலட்சம் பேர் ஐக்கிய நாடுகள்சபையின்பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (இ)

## ஐதரசன் குண்டுச்சோதனையின் எதிரொலி


# வடகொரியா மீது புதிய பொருளாதாரத் தடை விதிக்க அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஒப்புதல்

(வோஷிங்டன்)

ஐதரசன் குண்டுச் சோதனையை வெற்றிகரமாக நடத்தி முடித்ததோடு மட்டுமல்லாமல், நீண்டதூரம் இலக்கை கொண்ட ரொக்கெட்டை ஏவி உலகநாடுகள் மத்தியில் வடகொரியா கடும் கோபத்தை ஏற்படுத்தியது.

வடகொரியாவின் இந்த நடவடிக்கைக்கு அதன் முக்கிய நட்பு நாடுகளான ரஷ்யா மற்றும் சீனாவும் கூட கண்டனம் தெரிவித்தது. மேலும், ஐ.நாவின் தடையையும் மீறி வடகொரியாவின் இந்த நடவடிக்கைக்கு ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

இந்நிலையில், அணுகுண்டு சோதனை மற்றும் ரொக்கெட் ஏவுகணை சோதனை நடத்திய வடகொரியாவிற்கு தண்டனையாக நாடுகளில் இருந்து தனிமைப் படுத்தும் பொருட்டு அந்நாடு மீது புதிய தடை விதிக்க அமெரிக்க ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளார்.



இந்த தகவலை அமெரிக்காவின் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. இதன் மூலம் வடகொரியாவிற்கு மாபெரும் பேரழிவு தொடர் பான தொழில்நுட்ப பொருட்கள் உள்ளிட்டவற்றை ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அணுகுண்டு சோதனை, மனித உரிமைக்கு எதிரான நடவடிக்கை, சைபர் கிரைம் உள்ளிட்ட காரணங்களுக்காக இந்த தடை விதிக்கப்படுவதாகவும் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஆட்டோ இறக்குமதிகளை வரையறுக்குமாறு கோரிக்கை

ஆட்டோ இறக்குமதிகளை வரையறுக்குமாறு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆட்டோ இறக்குமதிகளை அரசாங்கம் வரையறுக்காவிட்டால் நாட்டின் பொருளாதாரத்தில் பாதக விளைவுகள் ஏற்படக்கூடும்.

பாடசாலைகளிலிருந்து வெளியேறும் இளைஞர்கள் ஆட்டோ செலுத்தும் துறையை தேர்வு செய்கின்றனர். இதனால் தச்சு வேலை, மின்பொறியியல், சாரதி, நடத்துநர் உள்ளிட்ட ஏனைய பல தொழில்களில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆட்டோக்களை அதிகளவில் இறக்குமதி செய்வதனால் இளைஞர்களின் தொழில் வளம் பாதிக்கப்படுகின்றது. தனியார் பேருந்து போக்குவரத்துத் துறைக்கும் நெருக்கடியான நிலைமை ஏற்படுகின்றது.

இந்தியாவில் டில்லியில் ஆட்டோக்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையிலும் ஆட்டோ வண்டிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும். அரசாங்கம் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-19.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.22 | 146.24 |
| பவுண்ட் | பிரிட்டன் | 202.87 | 210.08 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 157.19 | 163.44 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.41 | 148.36 |
| டொலர் | கனடா | 102.63 | 106.80 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.14 | 104.88 |
| டொலர் | சிங்கப்பூர் | 100.57 | 104.43 |
| ரூபா | இந்தியா | 2.0963 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.7266 |
| குவைத் | டினார் | 481.0495 |
| ஓமான் | ரியால் | 373.8442 |
| கட்டார் | ரியால் | 39.5222 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3747 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1849 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 | 80 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 130 | 150 | 160 | 160 | 150 |
| தக்காளி | 50 | 50 | 50 | 40 | 80 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 50 | 60-100 | 80 | 80 | 60 |
| கரட் | 140 | 160 | 160 | 200 | 200 | 240 | 180 |
| பூசணி | 60 | 40-60 | 70 | 70 | 60 | 100 | 80 |
| புடோல் | 50 | 40 | 40 | 50 | 80 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 40 | 45 | 40 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60-100 | 70 | 60 | 100 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 50 | 60 | 60 | 60 | 60 |
| பாகற்காய் | 60 | 100 | 70 | 70 | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 120 | 50 | 80 | 70 | 100 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | — | 80 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100-120 | 50 | 60 | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 110 | 80 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 70 | 50 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 180 | 130 | 200 | 200 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 600 | 400-550 | 400 | 400 | 600 | 600 | 800 |
| போஞ்சி | 80 | 100 | 30 | 60 | 80 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 | — | 70 | 60 | 60 |
| கீரை-1பிடி | 40 | 10 | 15 | 30 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 40-50 | 50 | 60 | 60 | 40 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 50 | 45 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 120 | 180 | 90 | 160 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 60 | 50 | 60 | 100 | 60 | 120 | 60 |
| முள்ளங்கி | 20 | 30 | 30 | 40 | 60 | 60 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | — | — | — | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## போராளிகளுடன் எம்.ஜி.ஆர். சந்திப்பு 110

...அதன்படி, போராளிகளை எம்.ஜி.ஆர். அழைத்துப்பேசினார். இந்தச் சந்திப்பு சென்னை கோட்டையில் 3-11-1986 அன்று நடைபெற்றது.

**2 மணி நேரம்**

காலை 11 மணி முதல் 2 மணி நேரம் இந்த ஆலோசனை நடந்தது.

உணவு அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன், சட்டம் மற்றும் கல்வித்துறை அமைச்சர் பொன்னையன், மத்திய அரசின் அரசியல் சட்ட நிபுணர் பாலகிருஷ்ணன், தமிழ்நாடு பொலிஸ் டைரக்டர் ஜெனரல் (ரகசிய புலனாய்வுப்பிரிவு) மோகன்தாஸ், முதலமைச்சரின் தனிச்செயலாளர் பரமசிவம் ஆகியோர் பேச்சுவார்த்தையின்போது உடன் இருந்தனர்.

ஒவ்வொரு போராளி இயக்கத்தின் சார்பில் கலந்து கொண்டவர்கள் விபரம் வருமாறு:-

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (எல்.டி.டி.ஈ.):- பிரபாகரன், பாலசிங்கம்.

தமிழ்ஈழ மக்கள் விடுதலை இயக்கம் (பிளாட்):- உமா மகேஸ்வரன்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி:- பத்மநாபா, கேதீஸ்வரன், கிருபா, வரதராஜ பெருமாள்.

ஈழப்புரட்சி அமைப்பு:- பாலகுமார்.

தமிழீழ விடுதலை இயக்கம்:- செல்வம்.

**பேட்டி**

பேச்சுவார்த்தை முடிந்த பிறகு நிருபர்களிடம் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியதாவது:-

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி இலங்கை அரசாங்கம் தயாரித்துக் கொடுத்து இருந்த மாற்றுக் கருத்துக்கள் ஏற்கனவே இலங்கைத் தமிழ்ப் போராளிகள் குழுக்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டன.

அந்தக் கருத்துக்கள் மீது தங்களுடைய பதில்களை இன்றைய கூட்டத்தில் அந்த போராளிகள் தனித்தனியாக வந்து முதலமைச்சரிடம் எழுதி கொடுத்தார்கள்.

**மீண்டும் சந்திப்பு**


அந்தப் பதில்களைத் தமிழக அரசும் மத்திய அரசும் ஆராய்ந்து பார்க்கும். அதன் பிறகு தேவையானால் மீண்டும் இலங்கைத் தமிழர் போராளிகள் குழுவோடு விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.


மேற்கண்டவாறு அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் கூறினார்.

பின்னர் அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-









**திருப்தி அளிக்கிறதா?**

நிருபர் கேள்வி:- அவர்கள் கருத்து உங்களுக்குத் திருப்தி அளிக்கிறதா? இலங்கைப் போராளிகள் ஏதாவது சொன்னார்களா?

பதில்:- அவர்கள் பதில்களை இனிமேல்தான் ஆராய வேண்டும்.

கேள்வி:- சென்னை சூளைமேட்டில் போராளிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் மரணம் அடைந்தது பற்றி இன்றைய கூட்டத்தில் எதுவும் பேசப்பட்டதா?

பதில்:- அந்தச் சம்பவம் பற்றி எதுவும் பேசப்படவில்லை.

**சிக்கலான பிரச்சினை**

கேள்வி:- இலங்கைத் தமிழர் பிரச்சினையை விரைவில் முடிப்பதற்காக அந்த போராளிகளுக்குள் ஒருமித்த கருத்துடன் வரும்படி அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டதா?

பதில்:- இந்தப் பிரச்சினை 30 ஆண்டு காலமாக இருந்து வரும் மிக சிக்கலான பிரச்சினையாகும். ஏற்கனவே இருந்து வரும் நிலைகளை விட்டுக்கொடுக்கும் அளவில் இல்லை. ஆகவே இந்தப் பிரச்சினை தீர்வுக்குக் காலம் செல்லத்தான் செய்யும்.

மேற்கண்டவாறு பண்ருட்டி ராமச்சந்திரன் பதில் அளித்தார்.

அப்போது கல்வி அமைச்சர் பொன்னையனும் உடன் இருந்தார்.

**போராளிகள் கருத்து**

இந்தப் பேச்சுவார்த்தை பற்றிப் பத்மநாபனும் கேதீஸ்வரனும் நிருபர்களிடம் கூறியதாவது:-

இலங்கை அரசு அனுப்பியுள்ள மாற்றுக் கருத்துக்கள் எங்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. தற்போதைய இலங்கை அரசியல் சட்டத்திற்குள் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பு இல்லை.

இன்னொரு இலங்கைப் போராளிக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கூறியதாவது:-

இந்த மாற்றுக் கருத்துக்கள் எல்லாம் அரசியல் சட்டப்படியான நுணுக்கங்கள் தொடர்பு உள்ளவையாகும்.

ஆனால் எங்கள் அரசியல் கொள்கையான ஈழம் பற்றி எந்தக் கருத்தும் இல்லை. மேற்கண்டவாறு அப் பிரமுகர்கள் கூறினார்கள். (தொடரும்)

# ஊடகங்களை அச்சுறுத்தாமல் அரசாங்கம் தீர்வுகாண முடியும்

## சுதந்திர ஊடக அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**அரசாங்கம் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தாமல் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என சுதந்திர ஊடக அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

ஊடகவியலாளர்கள் அல்லது ஊடக நிறுவனமொன்று பிழை செய்தால் அந்த ஊடக நிறுவனத்தையோ அல்லது ஊடகவியலாளரையோ அரசாங்கம் திட்டவோ, அச்சுறுத்தவோ கூடாது.

மாறாக ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் பேசி பிணக்குகளை தீர்த்துக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்தி பிணக்குகளுக்கு தீர்வு காணாவிட்டால் உரிமைகள் என்ற பெயரில் மாற்றுக் கொள்கைகளை வகிப்போரை ஒடுக்க அரசாங்கம் முயற்சிக்கின்றதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும்.

இலத்திரனியல் ஊடகங்களுக்காக சுயாதீன தர நியம முறைமையொன்று ஊடக சமூகத்தின் மத்தியில் உருவாக்கப்படாமை பெரும் குறைபாடாகவே அமைந்துள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சுயாதீன ஊடக ஆணைக் குழு ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியமாகின்றது என சுதந்திர ஊடக அமைப்பு ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது. (இ)

# மேர்வினின் மகன் மாலக சில்வா விடுத்த கோரிக்கைமனு நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மனோஜ் மாலக சில்வா தாம் இரவு கேளிக்கை விடுதிகளுக்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் நீதிமன்றம் விடுத்திருந்த தடையுத்தரவை நீக்குமாறு கோரியிருந்த மனு நீதிமன்றத்தினால் மீண்டும் நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 18 ஆம் திகதி கொழும்பு மேலதிக நீதவான் நீதிபதி நிஸாந்த பீரிஸ் மாவட்ட சில்வாவின் மனுவை மீண்டும் நிராகரித்துள்ளார்.

பம்பலப்பிட்டி இரவு கேளிக்கை விடுதியொன்றிலிருந்து பிரிட்டன் யுவதியொருவரை கடத்திய சம்பவம் தொடர்பான வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நேற்று முன்தினம் நீதிபதி இதனை அறிவித்தார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியதுடன் மாலக சில்வா சார்பில் ஆஜரான சட்டத்தரணி அசேல மாலக சில்வா மீதான மேற்படி தடையை நீக்குமாறும் அல்லது அந்த நிபந்தனையை சற்று இலகுபடுத்துமாறும் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டார்.

இதன்போது சந்தேக நபர் தற்போது பிணையில் இருப்பதாக் குறிப்பிட்ட நீதிபதி, இந்த நிலையில் நிபந்தனையை இலகுபடுத்தினால் மீண்டும் இது போன்றதொரு சம்பவம் இடம்பெற்றால் அது பாதிப்பாக அமையும் எனவும் தெரிவித்தார். (இ)

# வீடுகளை உடைத்தமை குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

பாலத்துறை கஜூமா தோட்டத்தில் சட்டவிரோத குடியிருப்புக்கள் உடைக்கப்பட்டுள்ளமையினையடுத்து அங்கு வசித்த மக்களுக்கு தமது வதிவிடம் தொடர்பில் மாற்று நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்க சம்பந்தப்பட்ட அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க தயாராக இருக்கின்றோம் என்று கல்வி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி செயலாளருமாகிய அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். இவ்விடயத்தைஅடிப்படையாககொண்டு ஒரு சிலர் அரசியல் இலாபம் தேட முனைவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாலத்துறை கஜூமா தோட்டத்தில் வீடுகள் அகற்றப்பட்டமை தொடர்பிலும் அதற்கு அப்பிரதேச மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையொன்றை முன்னெடுத்தமை உள்ளிட்ட சில விடயங்கள் குறித்தும் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதி செயலாளரும் கல்வி அமைச்சருமாகிய அகில விராஜ் காரியவசம் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

கடந்த திங்கட்கிழமை பாலத்துறை பிரதேசத்தில் உள்ள கஜூமா தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த சில குடியிருப்புக்கள் சட்டவிரோதமானவை என்ற காரணத்தின் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபையினரினால் பலத்த பொலிஸ் பாதுகாப்பின் அடிப்படையில் வீடுகள் அகற்றப்பட்டன.



அந்தவகையில் இதற்கு அப்பிரதேச மக்கள் பாதைகளை முற்று முழுவதுமாக மறைத்து அன்றைய தினம் முழுவதலும் எதிர்ப்பு நடவடிக்கையை வெளிப்படுத்தினர்.

இவ்வாறான நிலையில் இது தொடர்பில் மேல்மாகாண மற்றும் மாநகர அபிவருத்தி அமைச்சானது முழுமையான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். குடியிருப்புகளிலிருந்து அகற்றப்பட்ட மக்களுக்கான மாற்று நடவடிக்கையினை விரைந்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு எவ்வித அறிவுறுத்தல்களுமின்றி எமது அரசாங்கத்தின் கீழ் நடைபெறுவதானது கட்சியின் கொள்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் அப்பாற்பட்டது. எனவே இது தொடர்பில் நியாயத் தன்மையை உறுதிப்படுத்த நாம் தயாராகவே உள்ளோம்.

மறுபுறம் இவ்விடயத்தை அடிப்படையாக கொண்டு ஒருசிலர் அரசியல் இலாபத்தை பெற மறைமுகமாக முயற்சிக்கின்றனர். எனவே இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. நல்லாட்சி அரசின் கீழ் இப்பிரதேச மக்களுக்கு உரிய தீர்வினை முன்வைக்க வேண்டியது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## இன்று ஒரு தகவல்

### நமக்கு நாமே வழிகாட்டியா?

முழுக்க முழுக்க நன்மையையோ வெற்றியையோ தரக் கூடிய நடவடிக்கைகளில் ஒரு முடிவுக்கு வருவதைப் பற்றித் தயக்கம் காட்ட வேண்டிய அவசியமே இல்லை. ஆனால்,

அப்படியா? இப்படியா? என்று முடிவுக்கு வர முடியாத சூழ்நிலையில் மற்றவர்களைக் கலந்து கேட்டு முடிவுக்கு வருவதில் தவறென்ன இருக்க முடியும்.

எல்லாருக்கும் தெரிந்து விடக்கூடாது என்ற சூழ் நிலையில் மற்றவர்களிடம் யோசனை கேட்பது புத்திசாலித்தனமான காரியமல்லதான். இத்தகைய, சூழ்நிலையில் மனைவி கணவனிடமும் கணவன் மனைவியிடமும் யோசனை கேட்கலாம். தாய், தந்தையர் மற்றும் நெருங்கிய நண்பனிடமும் யோசனை கேட்கலாம். ஆனால், இவர்களிடங்கூட கேட்க இயலாத முடிவு என்றால் அது நிச்சயம் தவறான செயலாகவே இருக்கும் என்று சொல்லி விடலாம்.

நாம் எடுக்கப் போகும் முடிவின் மீது நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஒருவித வெறுப்போ விருப்போ ஏற்பட்டு விடுகிறது. இது நம்முடைய தீர்க்கதரிசனத்தை மறைத்துவிடும். நிலைமை தெரியாமல் ஆக்கி விடும். இதன் காரணமாக நம் முடிவு தவறாக அமைந்து விடக்கூடும்.

ஆனால், மற்றவர்களின் யோசனைகள் விருப்பு வெறுப்பு இன்றி இருக்க அதிகமாக வாய்ப்பு இருக்கிறது.

அனுபவத்திலும் வயதிலும் முதிர்ந்தவர்கள் தவறு செய்ய முயல ,அவர்களது மனத்தை மாற்றி நல் வழிப்படுத்தியவர்கள் வயதிலும் அனுபவத்திலும் குறைந்தவர்களாக இருந்த சம்பவத்தை எத்தனை முறை வரலாற்றிலும் புராணங்களிலும் இலக்கியங்களிலும், ஏன் வாழ்க்கையில் கூடக் கண்டிருக்கிறோமே!

குடும்ப நன்மை காரணமாக நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டி இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். மற்றவர்களின் சம்மதத்தைக் கேட்காமல் ஒரு முடிவுக்கு வருகிறோம். இத்தகைய முடிவுகளின் மூலமாக ஏற்படும் பின் விளைவுகள்–பலன்கள் மகிழ்ச்சிக்குரியவையாக அமைந்து விட்டால் அந்த மகிழ்ச்சியில் பங்கு கொள்ள அனைவரும் வருவார்கள். ஆனால், அவையே துன்பத்தைத் தருமானால் எல்லாரும் நம்மிடமிருந்து ஒதுங்கி விடுவதுடன் நிற்காமல் நம் மீது பழி சுமத்தவும் தயங்க மாட்டார்கள். துன்பம் என்பது ஓராயிரம் உறவினர்களையும் நம்மிடம் இருந்து துரத்தியடிக்கும் பொல்லாத கல் என்பதை நாம் உணர வேண்டும். மற்றவர்களின் அரிய–உயரிய யோசனைகளுடன் ஒரு காரியத்தில் இறங்குவோமானால்.

அவர்களால் எதிர்பார்க்கப்பட்ட குற்றங்களையும் குறைகளையும் நம்மால் சமாளிக்கவும் முன்னெச்சரிக்கையாக இருக்கவும் முடியும். மேலும் அவர்கள், நம் நடவடிக்கைகளினால் ஏற்படக் கூடிய நன்மைகளை எடுத்துச் சொல்லியிருந்தால் அவை நமக்கு உற்சாகம் தந்து உரமூட்டக் கூடியனவாக இருக்கும்.

லேனா தமிழ்வாணன்

# பிக்குகள் கைதாவதன் பின்னணியில் அரசியல்வாதிகள்

## ஹெல பொது சவிய சுட்டிக்காட்டு

பௌத்த பிக்குகள் கைதாவதன் பின்னணியில் பௌத்தத்திற்கு விரோதமான அரசியல்வாதிகள் செயற்பட்டு வருவதாக ஹெல பொது சவிய அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. பௌத்த பிக்குகள் கைது செய்யப்படுவது தொடர்பில் அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

நீதி நேர்மையின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பௌத்த பிக்குகளுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் எனவும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், நீதிமன்றை அவமரியாதை செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள சமூக செயற்பாட்டு பௌத்த பிக்குகள் தொடர்ச்சியாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வலுவான சந்தேகம் எழுந்துள்ளதாகவும் ஹெல பொது சவிய குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், நாட்டின் சட்டத்துறையைச்சார்ந்தவர்கள் தனிப்பட்ட குரோதங்களை ஈடுசெய்து கொள்ள தொழிலை பயன்படுத்தக்கூடாது என ஹெல பொதுசவிய அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஹெல பொது சவிய அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)




# மென்மையான இளவரசிகள்!

...எதிர்பாராதது நடந்ததைக் கண்ட அரசர் திகைத்தார்.

உடனே, அரண்மனைக்கு வைத்தியர் வந்தார்.

மலர் விழுந்ததால் அரசியின் காலில் ஏற்பட்டிருந்த காயத்தைப் பார்த்தார். அதில் மருந்து தடவி காலிற்கு கட்டுப் போட்டார் வைத்தியர்.

"அரசே! அஞ்சுவதற்கு ஒன்றும் இல்லை. சிறிது நேரத்தில் அரசியின் மயக்கம் தெளிந்துவிடும்," என்றார்.

அரசியின் மயக்கம் தெளிவதற்காகப் பணிப் பெண்கள் விசிறிக் கொண்டிருந்தனர்.

அவளின் மயக்கம் தெளியவில்லை. அவள் தூங்கி எழட்டும் என்று எண்ணிய அரசர், இரண்டாவது மனைவி தன்ஷிகாவின் மாளிகைக்குச் சென்றார்.

அங்கே அரசரும், தன்ஷிகாவும் மாளிகையின் மேல் தளத்தில் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தனர். அப்படியே தூங்கி விட்டனர்.

வானத்தில் முழு நிலவு எழுந்தது. அதன் ஒளி எங்கும் பரவியது. நன்கு போர்த்திக் கொண்டு படுத்திருந்தாள் தன்ஷிகா. அவளுடைய உள்ளங்கை மட்டும் போர்வைக்கு வெளியே இருந்தது. நிலவொளி அவள் கையில் பட்டது.

"ஆ! ஐயோ! என்ன செய்வேன்! தீப்பிடித்தது போல என் கை எரிகிறதே. வலி தாங்க முடியவில்லை," என்று அலறியபடியே எழுந்தாள் அவள்.

அரசியின் அலறல் கேட்டு அரசனும் விழித்துக் கொண்டார்.

அவள் உள்ளங்கையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். நெருப்பு பட்டதைப் போல அவள் கையில் கொப்புளங்கள் இருந்தன. அரசருக்கு ஒன்றும் புரியவில்லை.

"எப்படி இந்தத் தீக்காயங்கள் ஏற்பட்டன?" என்று கேட்டார்.

துடிதுடித்தப்படியே அவள், "நிலவொளி பட்டதால் இந்தக் காயங்கள் ஏற்பட்டன," என்றாள்.

அங்கு வந்த பணிப் பெண்கள் அவள் கையில் சந்தனத்தைப் பூசினர்.

மருத்துவரை அழைத்து வர ஒரு பணிப் பெண் ஓடினாள்.

என்ன செய்வது என்று அறியாம்ல் குழம்பி நின்றார் அரசர்.

தன்ஷிகாவிற்கும், தாரிகாவிற்கும் ஏற்பட்ட துன்பத்தைக் கேள்விப்பட்டாள் தனுஜா.

அவர்களைப் பார்த்து



ஆறுதல் சொல்ல நினைத்தாள்.

தன் மாளிகையை விட்டு வெளியே வந்தாள் அவள்.

அருகிலிருந்த யார் வீட்டிலோ உலக்கையால் இடித்துக் கொண்டிருந்தனர். அந்த ஓசை தனுஜாவுக்கு கேட்டது.

"ஆ! ஐயோ! செத்தேன்!" என்று வலி தாங்க முடியாமல் அலறினாள் அவள். கையை உதறினாள்.

பணிப்பெண்கள் அவளை மாளிகைக்குள் அழைத்துச் சென்றாள்.

இதை அறிந்த அரசர் பரபரப்புடன் தனுஜாவின் மாளிகைக்குள் வந்தார். அவளுடைய கையைப் பார்த்தார்.

தாமரை மலரில் கருவண்டு இருப்பதைப் போலவே அவள் கைகள் கன்றிப் போயிருந்தன.

அன்று நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் நினைத்துப் பார்த்தார் அரசர்.

மனைவியர் மூவருமே மென்மையானவர்களாக உள்ளார்களே... "இவர்களில் யார் மிகவும் மென்மையானவர்?" என்று சிந்தித்தார்.

அவரால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

உலக்கை ஒலி கேட்டுக் கைகள் கன்றிப் போன தனுஜாவே மிகவும் மென்மையானவள். மற்ற இருவரும் அவளுக்கு ஒப்பாக மாட்டார்கள்.

சாமந்திப் பூ விழுந்ததாலும், நிலவொளி பட்டதா லும் தொடர்பு கொண்டதன் காரணமாகவே தாரிகாவுக்குக் காயமும், தன்ஷிகாவுக்கு கொப்புளங்களும் ஏற்பட்டன. ஆனால, தொடர்பு இல்லாமல் ஓசை கேட்டே தனுஜாவுக்கு கைகள் கன்றிப் போயின. இதனால், தனுஜாவே மிகவும் மென்மையானவள். **(முற்றும்)**





- 1547 - ஆறாம் எட்வேர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1627 - யாழ்ப்பாணத்தைத் தாக்கிய சூறாவளியில் சிக்கி பலர் இறந்தனர்.
- 1798 - பாப்பரசர் ஆறாம் பயஸ் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 1835 - சிலியின் கொன்செப்சியோன் நகரம் நிலநடுக்கத்தில் அழிந்தது.
- 1910 - எகிப்தியப் பிரதமர் பூட்ரோஸ் காலி (Boutros Ghali) கொல்லப்பட்டார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா எனி வெட்டாக் தீவைக் கைப்பற்றியது.
- 1962 - மேர்க்குரி திட்டம்: ஜோன் கிளென் பூமியை மூன்று முறை சுற்றி பூமியைச் சுற்றிய முதலாவது அமெரி க்கர் என்ற புகழைப் பெற்றார்.
- 1965 - அப்பலோ விண்கலங்கள் சந்திரனில் இறங்கு வதற்கான இடங்களை வெற்றிகரமாகப் படங்கள் எடுத்த ரேஞ்சர் 8 விண்கலம் சந்திரனுடன் மோதி யது.
- 1987 - அருணாசலப் பிரதேசம் அசாமிலிருந்து பிரிந்து தனி மாநிலமாகியது.

**பிறப்புகள்**

- 1876 - கா. நமச்சிவாயம், தமிழறிஞர் (இ. 1936)
- 1937 - ரொபேர்ட் ஹியூபர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய வேதியியலாளர்
- 1945 - ஜியார்ஜ் ஸ்மூட், அமெரிக்க விண்ணியல் அறிஞர
- 1963 - சார்ல்ஸ் பார்க்லி, அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்
- 1977 - ஸ்டெஃபான் மார்பெரி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புகள்**

- 1896 - ஆணல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர், புலவர் (பி. 1820)
- 1907 - ஹென்றி முவாசான், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு வேதியியலாளர், (பி. 1852)
- 1916 - கிளாஸ் ஆர்னல்ட்சன், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி. 1844)
- 1972 - மரீயா கோப்பர்ட்-மேயெர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர், (பி. 1906)
- 1976 - ரெனே காசின், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1887)
- 2008 - டி. ஜி. எஸ். தினகரன், கிறித்துவ மறை பரப்புனர் (பி. 1935)
- **2011 - மலேசியா வாசுதேவன், பாடகர், நடிகர்**



## மலேசியா வாசுதேவன்

மலேசியா வாசுதேவன் ஜூன் 15, 1944 ஆம் ஆண்டு கேரளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மலேசியாவைச் சேர்ந்த சத்துநாயர் - அம்மாளு தம்பதியருக்கு 8 ஆவது மகனாகப் பிறந்தார். இவர் ஒரு தென்னிந்தியத் திரைப்படப் பாடகரும் நடிகரும் ஆவார். எட்டாயிரத்திற்கும் அதிகமான தமிழ்த் திரைப்பாடல்களைப் பாடியவர். இவர் மலேசியாவில் தமிழர் இசைக் குழு ஒன்றில் முக்கிய பாடகராக விளங்கினார்

மலேசியாவில் பல நாடகங்களில் நடித்த அனுபவத்தை நம்பிக்கையாகக் கொண்டு, சென்னை வந்து திரைப்பட வாய்ப்புகளைத் தேடினார். மலேசியத் தமிழர்கள் கூட்டாகத் தயாரித்த "இரத்தப் பேய்" என்ற தமிழ்ப் படத்தில் முதல் முறையாக நடிகனாக அறிமுகமானார். 1970களில் விளம்பர நிறுவனங்களுக்காக 45 ஆவணப் படங்களில் நடித்துள்ளார். இளையராஜாவின் "பாவலர் பிரதர்ஸ்" குழுவில் பல மேடைக் கச்சேரிகளில் பாடி வந்தார்.

ஜி. கே. வெங்கடேஷ் இசையமைப்பில் "பொல்லாத உலகில் ஒரு போராட்டம்" என்ற படத்தில் பாலு விக்கிற பத்தம்மா... என்ற பாடல் மூலம் திரையுலகில் பாடகராக அறிமுகமானார். பாரதிராஜா இயக்கத்தில் 16 வயதினிலே படத்தில் கமல்ஹாசனுக்காக "ஆட்டுக்குட்டி முட்டையிட்டு..." என்ற அவர் பாடிய பாடல் பெரும் புகழ் பெற்றது.

அதன் பிறகு ஏராளமான படங்களில் புகழ்பெற்ற பாடல்களைப் பாடினார். கோடைகாலக் காற்றே, அள்ளித் தந்த பூமி, அடியாடு பூங்கொடியே, தங்கச் சங்கிலி எனப் பல பாடல்கள் புகழ் பெற்றன.

ஒரு கைதியின் டைரி படத்தில் வில்லனாக நடித்தார். அதன் பின்னர் பல படங்களில் நடிக்கவும் தொடங்கினார். 85 திரைப்படங்களில் நடித்துள்ளார் மலேசியா வாசுதேவன். முதல் வசந்தம், ஊர்க்காவலன், ஜல்லிக்கட்டு என வெற்றிப்படங்கள் பலவற்றில் வில்லனாகவும் குணச்சித்திர வேடத்திலும் நடித்துள்ளார். சன் தொலைக்காட்சியில் 'சிலந்தி வலை" உட்பட ஏராளமான தொலைக்காட்சித் தொடர்களில் நடித்துள்ளார்.

ஆனந்த் என்பவர் இயக்கிய "மலர்களிலே அவள் மல்லிகை" என்ற படத்துக்கு கதை, வசனம் எழுதியிருக்கிறார்.

சில ஆண்டுகளாக பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட வாசுதேவன் 2011 பெப்ரவரி 20 ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிக்கு காலமானார். அவருக்கு மனைவியும், யுகேந்திரன் என்ற மகனும், பிரசாந்தினி என்ற மகளும் உள்ளனர். யுகேந்திரன் நடிகராகவும் பின்னணிப் பாடகராகவும் உள்ளார். பிரசாந்தினியும் இப்போது பின்னணி பாடி வருகிறார்.

# மாகாண சபைகளில் இளைஞர், பெண்கள் பிரதிநிதித்துவம் 40 வீதம் கட்டாயம்

## வலியுறுத்துகிறார் பிரதியமைச்சர் சாந்த பண்டார

(கொழும்பு)

கடந்த வருடத்தைப் போன்று மாகாணசபைத் தேர்தல்களில் பெண்களின் பிர்திநிதித்துவம் 40வீதமாக இருக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணி பிரதி அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்திற்கு அமைவாக,முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிறேமதாசவின் காலப் பகுதியில்,மாகாண சபைத் தேர்தலில் 40வீதமான பெண்கள் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப் பட்டிருந்தது.

இளைஞர்களின் பிரதிநிதித்துவமும் மாகாண சபைத் தேர்தலில் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதால் தனிப்பட்ட முறையில் தேர்தலில் போட்டியிட்டேன்.விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் கூட40 வீதமான இளைஞர் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது.

கிராமங்களிலுள்ள இளைஞர்கள் அரசியலுக்கு வருவதற்கு மிகவும் ஆர்வம் உள்ளவர்களாக உள்ளனர்.அவர்கள் மக்களுக்கு சேவை செய்வதற்கான கதவுகள் திறக்கப்பட வேண்டும். இதற்கு ஏற்ற சூழ்நிலைகள் மாகாண சபை அமைப்புகளில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இது தொடர்பாக ஜனாதிபதி, உள்ளூ ராட்சி சபைகள் , மாகாணசபை அமைச்சர்கள் ஆகியோரிடம் கோரி க்கை முன்வைப்பதுடன் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் 40 வீத மான இளைஞர் பிரதிநிதித்துவ த்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் கவ னம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (3)

# தாய்லாந்து அரசின் உதவியுடன் பிக்குமாருக்கான வைத்தியசாலை

தாய்லாந்து அரசின் உதவியுடன் இலங்கையில் பிக்குகளுக்கான வைத்தியசாலை மற்றும் பல்கலைக்கழகம் ஒன்று நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக கைத்தொழில் அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த வாரம் தானும், தூதுவர்களும் தாய்லாந்துக்கு உத்தியோகபூர்வ சுற்றுப்பயணத்தினை மேற்கொண்ட போது இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களோடு கலந்துரையாடியதாக தெரிவித்தார்.

அத்துடன் கடந்த வாரம் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் பௌத்த மாநாட்டின் தேசிய விசுர்திமக முதல் மங்கள வைபவம் இடம்பெற்றதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டின்போது பௌ த்த பிக்கு மாணவர்களை வலுவூட்டுவது தொடர்பிலும், அவர்களுக்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் பழைமையான வரலாற்று சமயமான பௌத்த மதத்தை சர்வதேச அளவில் விஸ்தரிப்பதற்கும், பலப்படுத்துவதற்கும் பிக்கு மாணவர்களின் ஆங்கில அறிவு மற்றும் தகவல் தொடர்பு திறனை மேம்படுத்த கூடிய திட்டங்கள் தொடர்பில் இந்த பௌத்த சமமேளன மாநாட்டில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அமைச்சர் தயா கமகே தெரிவித்தார். (இ)

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக ஜெப்ரி அழகரட்ணம் தெரிவு

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக ஜனாதிபதி சட்டதத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக சட்டத்தரணி அமல் ரந்தெனிய தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2016-2017 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்டத்தரணிகள சங்கத்தின் செயலாளரை தெரிவு செயயும் தேர்தல் கொழும்பு மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகள் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்றது.

தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளாக சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத், பிரதி சொலிசிட்டர் ஜெனரல அயேஷா ஜினசேன ஆகியோர் கடமையாற்றியதுடன் அவர்களின் கண்காணிப்பில் தேர்தல் நடைபெற்றது.

செயலாளர் பதவிக்கு, சட்டத்தரணிகள் அமல் ரந்தெனிய, சென ரத் ஜயசுந்தர, எராஜ் டி. சில்வா ஆகியோர் போட்டியிட்டனர். அவர்களில் அமல் ரந்தெனிய தெரிவு செய்யப்பட்டார். இதற்கு முன்னர் சட்டத்தரணி அஜித் பத்திரண செயலாளராக பதவி வகித்தார்.

இதனிடையே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 22பவது தலைவராக ஜெப்ரி அழகரட்ணம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை முழுவதும் உள்ள 77 நீதிமன்றங்களில் நேற்று முன்தினம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தல் நடைபெற்றதாக சங்கத்தின் முன்னாள் செயலாளர் அஜித் பத்திரண தெரிவித்தார். (இ)

# நிதிமோசடி விசாரணைப்பிரிவை ஜனாதிபதி கலைக்கக் கூடாது

## அபிவிருத்தி அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட தனிநபர்களினது அழுத்தங்களுக்கு அடி பணிந்து நிதிக்குற்ற விசாரணைப் பிரிவை எந்தவொரு சூழ்நிலைகளிலும் கலைக்கக்கூடாது என்றும் அதற்கெதிராக போராட வேண்டும் என்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

மலையகத் தொழிலாளர்களுக்கு நுவரெலியா அக்கரபத்தனவில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்ட நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஊழல் மற்றும் சட்டவிரோத நிதி மோசடிகளில் ஈடுபட்டவர்கள், நிதிகுற்ற விசாரணைப் பிரிவுக்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். எனவே ஜனாதிபதி இந்த விசாரணைப் பிரிவை கலைக்கக்கூடாது.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக மக்கள் வாக்களித்தே இந்த அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்தியுள்ளனர். நிதிமோசடி மற்றும் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டவர்களை நாட்டின் சட்டத்திற்கமைவாக தண்டிக்க வேண்டும் என்பதே அந்த மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அரசாங்கம் தனது வாக்குறுதியை நிறைவேற்றத்தவறினால் இந்த அரசாங்கமும் ஊழல் மோசடிகளுக்கு வழிசமைத்துக் கொடுத்ததாகவே அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (3)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 638

### டனி

முட்டாள்களைக் காட்டிலும்
அறிவாளிகளிடம்
அதிகம் கவனமாக இருங்கள்

ஏனென்றால்.
மாட்டிக் கொள்ளாமல்
குற்றம் செய்வது எப்படி என்பதை
அவர்கள்தான்
நன்றாக அறிந்தவர்கள்

### ஜெனி



### ஹாசினி



### செரோன்




### சந்திரன் சிந்து




### நவ ஜீவன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2016~13.03.2016



**சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும் நேரம்! உணர்ச்சிவசப்படும் தன்மையும் உதவும் மனப்பான்மையும் பெற்ற கும்ப இராசி நேயர்களே!**

மாசிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது குருவின் பரிபூரண பார்வை ராசியில் பதிகின்றது. எனவே நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். சூரியனும் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கின றார். எனவே, பிரகாசமான எதிர் காலம் அமைய பின்னணியாக இருப்பவர்கள் வழிவகுத்துக் கொடுப பர்.

குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதோடு 3, 11 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. எனவே, உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். உற்சாகம் அதிகரிக்கும். கடன் சுமை பாதிக்கு மேல் குறைந்தது என்று சொல்லி மகிழ்வீர்கள். கடந்த காலத்தைவிட இப்போது நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும்.

வெளிநாட்டு யோகம் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். விரும்பிய தகவல்களும் தபால்மூலம் வந்து சேரலாம். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பார்த்துப் பார்த்து கட்டிய வீட்டைக் கொடுத்துவிட்டுப் புதிய வீடு வாங்கலாமா? அல்லது தொழில் தொடங்கலாமா? என்ற புதிய சிந்தனை உருவாகலாம். என்ன இருந்தாலும் இப்பொழுது சுபவிரயம் செய்ய வேண்டிய நேரம. ஜென்ம ராசியில் கேது சூரியனுடன் அல்லவா இருக்கின்றார்.

எனவே கோபத்தைக் குறைத்து கொள்கைப் பிடிப்பையும் தளர்த்திக் கொள்வது நல்லது. புதிய கூட்டாளிகள் இணைந்து பொருளாதார விருத்திக்கு வித்திடுவர். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்க வழி பிறக்கும். மணமாலை சூடுவதில் இருந்த தடை அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உடன் பணி புரியும் சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை மாறும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து இதயம் மகிழ்வீர்கள்.

**சுக்ரப் பெயர்ச்சிக் காலம்!**

மாதத்தின் தொடக்க நாளில் மகரத்திற்கு சுக்ரன் செல்கின்றார். 4, 9 இற்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது பெற்றோர்களால் விரயம் ஏற்படலாம். அவர்களின் உடல் நலத்தை முன்னிட்டு மருத்துவ ஆலோசனை பெறுவதில் செலவிடும் சூழ்நிலை உருவாகும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் தகராறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். செயற்பாடுகளில் இருந்த தேக்க நிலை மாறும். சுபகாரியப் பேச்சு வார்த்தைகள் முடிவாகும். மார்ச் 8 ஆம் திகதி உங்கள் ராசியிலேயே சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இம்மாதம் ஒரு இனிய மாதமாகும. இடையூறுகள் அகலும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

பெப்ரவரி 25 ஆம் திகதி கும்ப ராசியான உங்கள் ராசிக்கு புதன் செல்கின்றார். பஞ்சம அஷ்டமாதிபதி ராசியில் சஞ்சரிப்பதால் குழந்தைகளின் எதிர்காலக் கனவுகளை நனவாக்குவீர்கள். அவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், கடல் தாண்டும் முயற்சிக்கும் உறுதுணையாக விளங்குவீர்கள். பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்வதில் இருந்த இடையூறுகள் அகலும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். மீனத்தில் புதன் நீச்சம் பெறப் போகின்றார். இக்காலத்தில் சில விரயங்களைச் சந்திக்க நேரிடும். குடும்பச் சுமை கூடும். உத்தியோகத்தில் உயர்அதிகாரிகளால் மனக் கலக்கம் ஏற்படலாம்.




**செவ்வாய் சனி சேர்க்கைக் காலம்!**

பெப்ரவரி 26 ஆம திகதி விருச்சிக ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். அதனால் எதிரிகளின் கை மேலோங்கும். மறைமுகப் பகை அதிகரிக்கும். தொழில் போட்டிகளைச் சமாளிக்க முடியால் தத்தளிப்பீர்கள். அரசியல் ஆர்வலர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்படும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடைபெறுவதிலும் தாமதம் ஏற்படும்.

இம்மாதம் விநாயகர் வழிபாடு வெற்றியை வழங்கும். சிவராத்திரியன்று சிவனை வழிபட்டு சிறப்புகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

தெய்வ வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள வேண்டிய மாதமாகும். வாய்ப்புகள் வந்தும், அதை உபயோகப்படுத்திக் கொள்ள முடியவில்லையே என்று நினைப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் உதவி குறைவாகவே கிடைக்கும். கணவன், மனைவிக்குள் அமைதி கிடைக்க அனுசரித்துச் செல்வது நல்லது. குழந்தைகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் மாற்றச் சிந்தனை உருவாகும். செவ்வாய்- சனி சேர்க்கை காலத்தில் விரயங்கள் அதிகரிக்கும். குடும்பச்சுமை கூடும். சிவாலய தரிசனம் சிறப்பை வழங்கும்.

## சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும் நேரம்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**அருகிலிருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம்! பணியாளர்களை தட்டிக்கேட்டாலும் கொட்டிக் கொடுக்கும் குணம் பெற்ற மீன இராசி நேயர்களே!**

மாசிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கலாம். ஆற்றல்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்தாலும் சில காரியங்களில் தாமதம் ஏற்படும். அஷ்டமத்திலும் செவ்வாய் சஞ்சரிப்பதால் மன நிம்மதி குறைவும், மங்கல நிகழ்ச்சிகளில் தடையும் உருவாகலாம்.

இருப்பினும் ராகு-கேதுக்களின் பெயர்ச்சியால் உங்கள் ராசியில் இருந்த கேது ஜனவரி மாதத்திலேயே கும்பத்திற்கு வந்துவிட்டார். அதேபோல கன்னி ராசியில் இருந்த ராகுவும் சிம்மத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே, சர்ப்ப கிரக ஆதிக்கம் மாறியதால் இனி நற்பலன்கள் கிடைக்கும் என்றே சொல்லலாம்.

பொதுவாக ராசிநாதன் பலம் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுது தான் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய இயலும். நிகழ்காலத் தேவைகளும் பூர்த்தியாகும். ராசிநாதன் பலமிழந்திருக்கும் பொழுது முறையாக குரு வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும். குரு பீடமாக விளங்கும் திருச்செந்தூருக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவது நல்லது.

மேலும் வியாழக்கிழமை தோறும தென்முகக் கடவுளை வழிபட்டு வருவதன் மூலம் நன்மைகள் வந்துசேரும். இம்மாதக் கிரக நிலைகளின் அடிப்படையில் வீடு மற்றும் வியாபார நிலையம் போன்றவற்றை இருக்கும் இடத்திலேயே மாற்றியமைக்க வாய்ப்பு கைகூடி வரும். ஒருசிலர் புதிய இடத்திற்கு மாறுதல் செய்யலாமே என்று சிந்திப்பர்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உத்தியோக ஸ்தானாதிபதி சூரியன் கேதுவோடு இணைந்திருப்பதால் நீண்ட தூரத்தில் மாறுதல் கிடைத்து செல்லும் வாய்ப்பு உருவாகலாம். நிலம் விற்பனை செய்பவர்கள் பத்திரப் பதிவில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. அங்காரக வழிபாடும், சனி பகவான வழிபாடும் அல்லல்களை தீர்க்கும்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

மாதத்தொடக்க நாளில் மகரத்தில் சுக்ரன் சஞ்சரிக்கின்றார். 3, 8இற்கு அதிபதி 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நண்பர்களை நம்பி ஏமாறும் சூழ்நிலை ஏற்படலாம். சகோதரர்களால் உருவான தொழிலில் தனித்து இயங்கும் வாய்ப்பு உருவாகும். உடன்பிறப்புகளிடம் தொழிலை ஒப்படைப்பதா? இல்லை உடன பிறப்புகளு க்கு பணத்தைக் கொடுத்து விட்டுத் தானே தொழிலை ஏற்று நடத்துவதா? என்ற பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கலாம். திசாபுத்தி பல மறிந்து செயற்படுவதே நல் லது. மார்ச் 8 ஆம் திகதி கும்பத்தில் சுக்ரன் சஞ்சரி க்கும் பொழுது விபரீத ராஜயோகம் செயற்படப் போகிறது. எனவே பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடுமாற்றச் சிந்த னைகள் மற்றும் நாடு மாற்றச் சிந்தனைகளும் வந்து அலை மோதும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

4, 7 இற்கு அதிபதியான புதன் பிப்ரவரி 25 ஆம் திகதி கும்பத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாகப் பிரிந்து சென்றவர்கள் விரைந்து வந்திணைவர். மறைமுகச் சேமிப்புகள் இப்பொழுது கைகொடுத்து உதவும். அலுவலகம் தொடர்பான பணிகளில் நன்மைகள் ஏற்படும். பிறருக்கு ஜாமீன் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். மார்ச் 12 ஆம் திகதி மீனத்தில் புதன் நீச்சம் பெறுகின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். சொந்தங்களாலும, சொத்துக்களாலும் ஆதாயம் ஏற்படும். வருமானம் திருப்தி தரும்.




**செவ்வாய் சனி சேர்க்கைக் காலம்!**

பெப்ரவரி 26 ஆம் திகதி விருச்சிகத்திற்கு செவ்வாய் செல்லப் போகின்றார். அங்குள்ள சனியோடு இணைவதால் எதிர்பாராத விரயங்கள் ஏற்படலாம். பெற்றோர் வழியில் ஒத்துழைப்புகள் குறையலாம். பிரச்சினைகளுக்கு முடிவெடுக்க முடியாமல் தத்தளிப்பீர்கள். வழிபாட்டில் கவனம் செலுத்துவதன் மூலம் வளர்ச்சி கூடும். வீடு மாற்றம், நாடு மாற்றம், உத்தியோக மாற்றம் எதிர்பாராத விதத்தில் அமையும். கடன் சுமை அதிகரிக்கும். அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். இம்மாதம் சர்ப்ப கிரக வழிபாடு சந்தோஷத்தை வழங்கும். சிவராத்திரியன்று சிவன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உடல் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும. உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எந்தக் காரியமும் ஆரம்பத்தில் தடை ஏற்பட்டாலும் முடிவில வெற்றிகரமாக முடியும்.


குடும்பத்தில் அனுசரித்துச் செல்வதன் மூலம் குதூகலத்தை வரவழைத்துக் கொள்ள இயலும். மார்ச் 8 ஆம் திகதிக்கு மேல் தன வரவு தாராளமாக வந்து சேரும்.

கணவன்- மனைவிக்குள அனுசரித்துச் செல்வதன மூலமே அமைதி காண இயலும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமை தருவதாக இருக்கும். குரு வழிபாடும், சிவன் வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும். (முற்றும்)

## அருகிலிருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம்!

# இராணுவத்தை அகற்றி அச்சமற்ற சூழலை நல்லாட்சி அரசாங்கம் உருவாக்க வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



பொதுமக்களுக்கு பாதுகாப்பை வழங்கும் நல்லாட்சி என்று கூறிக்கொண்டு இருக்கின்ற இந்த அரசின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இராணுவத்தினரால் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதனை கருத்திற்கொண்டு இங்கிருந்து இராணுவத்தை அகற்றி அச்சமற்ற அமைதியான சூழலை உடனடியாக உருவாக்க வேண்டுமென என தெரிவித்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்,

வடக்கில் மேலதிகமாக நிலை கொண்டுள்ள இராணுவத்தினரால் நாளாந்தம் பொது மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இயல்பு நிலை பாதிக்கப்படுகின்றது. இந்நிலையில் தேசிய பாதுகாப்புக்கு இராணுவம் தேவை எனக் கருதினால் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படுமென அறிகின்ற இடங்களில் இராணுவத்தினை நிறுத்த வேண்டுமே தவிர பாடசாலைகளுக்கு அருகிலும் வீடுகளுக்கு முன்னாலும் விவசாய நிலங்களை ஆக்கிரமித்தும் இராணுவத்தினரை இங்கு வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கட்டப்பிராயில் உள்ள அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முழுங்காவில் மகா வித்தியாலயம் என்பது தற்போது தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதற்கு அருகிலேயே சிறுவர் பாடசாலையும் இருக்கின்றது. இதன் அருகில் உள்ள பத்து ஏக்கர் காணியை இராணுவம் பிடித்து வைத்திருக்கின்றது. இந்தக் காணியை முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் பாவித்தார்கள் என்ற காரணத்தைக் காட்டியே இராணுவம் வைத்திருக்கின்ற போதும் அந்தக் காணியானது தனிநபருக்குச் சொந்தமான காணியாகும்.

அந்தக் காணிக்குள் தற்போது இராணுவம் விவசாயம் செய்கின்றது. இந் நிலையில் இந்த மகாவித்தியாலயத்தில் ஆண், பெண் ஆசிரியர்களுக்காக தங்குமிட விடுதிகள் இரண்டு இருக்கின்றன. இந்த விடுதியில் யாழிலிருந்து செல்கின்ற ஆசிரியர்கள் தங்கியிருந்து படிப்பிக்கின்றனர். இந்நிலையில் அண்மையில் அந்த வேலியைப் பிரித்துக் கொண்டு இராணுவத்தினர் உள்நுழைந்து ஆசிரியர்கள் தங்கியிருக்கின்ற கதவைத் தட்டியுள்ளனர். இதன் போது அங்கிருந்த ஆசிரியர்கள் கூக்குரலிட்டுக் கத்தியுள்ளனர். இதன் பின்னர் வெளியாட்கள் வந்ததையடுத்து இராணுவத்தினர் தப்பிச் சென்றுள்ளனர்.

அந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டு அவர்களும்சம்பவ இடத்திற்கு வந்து சென்றனர். இதன் போது குறித்த வேலியை அடைத்துத் தருவதாகவும் குறித்த இராணுவத்தினரை இடமாற்றம் செய்வதாகவும் கூறியுள்ளனர்.

இவ்வாறு இராணுவம் கூறிவிட்டுச் சென்றிருக்கின்ற போதும் அந்த வேலி இன்றுவரை அடைக்கப்படவில்லை. இராணுவத்தினரும் மாற்றப்பட்டனரோ தெரியாது. இவ்வாறு தான் நிலைமைகள் இருக்கின்றன. இந்தப் பாடசாலைக்கு மேலதிகமாக காணிகள் தேவை. அதேநேரம் இந்தக் காணியானது பொது மக்களுக்குச் சொந்தமான காணியாக இருக்கின்றது. ஆகவே இராணுவம் தொடர்ச்சியாக இங்கிருப்பதன் காரணமாக பாடசாலையில் ஆசிரியர்கள் படிப்பிப்பதற்குப் பிரச்சினை, ஆசிரியர்கள் தங்கியிருப்பது பிரச்சினை, ஆசிரியர்களுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நிலை இவை எல்லாமே வந்திருக்கின்றன.

இதனாலேயே நாம் தொடர்ச்சியாக கூறுகின்றோம் இவ்வாறான பிரதேசங்களில் இராணுவம் தேவையில்லை. மேலதிகமாக இருக்கின்ற இராணுவத்தை மீள எடுங்கள். இராணுவம் இங்கு இருப்பது தேசிய பாதுகாப்பு என்று கருதினால் அவ்வா றான பாதுகாப்பிற்கு குந்தகம் என்று அறிகின்ற இடங்கள் எங்கெங்கோ அங்கெல்லாம் இராணுவத்தை வைத்திருங்கள். இதனை விடுத்து பாடசாலைக்கு நடுவிலும் பொது மக்களின் வீடுகளுக்கு அருகிலும் பொது மக்களின் விவசாய நிலங்களிலும் இராணுவம் இருப்பதென்பது நிச்சமாக தமிழ் மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

அதாவது அச்சுறுத்தல், கலாசார சீரழிவு, நடமாட முடியாத பிரச்சினைகள் ஏற்படும். இராணுவ ஆக்கிரமிப்பு என்பது குறைக்கப்பட வேண்டுமே தவிர அதிகரிக்கப்பட முடியாது. இதே போன்று பல பிரச்சினைகள் முல்லைத்தீவின் கேப்பாபுலவிலும் நடைபெற்றது. அங்கும் இராணுவம் வீட்டிற்குள் புகுந்திருக்கின்றது. அது மட்டுமல்லாமல் இன்னும் பல இடங்களில் பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் இன்னமும் கூட அரசாங்கம் இவர்களை வெளியேற்றுவதில் எந்தவித காத்திரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்போது குறிப்பாக வலிகாமம் வடக்கைப் பற்றி மாத்திரம் பேசப்படுகின்றது. அதாவது வலி.வடக்கில் பொது மக்களின் காணிகளில் இருந்த இராணுவம் வெளியேற வேண்டுமென்பது சரி. ஆனால் அது வலிகாமம் வடக்கில் இருந்து மாத்திரமல்ல யாழ்.குடாநாடு உட்பட வடக்கு மாகாணத்திலிருந்தே வெளியேற்றப்பட வேண்டுமென்ற தேவையை இராணுவத்தினரின் ஒவ்வொரு நாள் செயற்பாடுகளும் காட்டிக்கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த அரசாங்கம் அதாவது நல்லாட்சி என்று சொல்லக்கூடிய இந்த அரசாங்கம் மக்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதாக சொல்கின்ற அரசாங்கமானது முதலாவதாக மக்களுக்கு பாதுகாப்பை வழங்கும் வகையில் இந்த இராணுவத்தை இங்கிருந்து எடுக்காவிட்டால் கல்வி, பொருளாதாரம், விவசாயம் உள்ளிட்ட பல்வேறு துறைகளும் பாதிக்கப்படும்.

இவ்வாறான சூழ்நிலை தொடராமல் சாதாரண சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் உடனடியாகவே இராணுவத்தை வெளியேற்ற வேண்டுமென்பது தவிர்க்க முடியாததொரு விடயம். எனவே நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக இந்தவிடயத்தில் அக்கறை செலுத்தி இவ்வாறான இராணுவ முகாம்கள் எல்லாவற்றையும் அகற்ற வேண்டும். விடுதலைப் புலிகள் இருந்தார்கள் என்பதற்காக அவர்கள் வைத்திருந்த காணிகளை வைத்திருக்காது அவற்றை பொது மக்களிடம் கையளித்து சாதாரண சூழலொன்றை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (இ-4)

# புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு தொழிற்சங்கங்களின் ஆலோசனை கோரல்

(கொழும்பு)

எதிர்காலத்தில் பொதுச் சேவையில் ஈடுபடுகின்ற ஊழியர்களின் பங்களிப்புடனான ஓய்வூதியத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு தொழிற்சங்கங்களின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பொது நிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார கோரியுள்ளார்.

ஏற்கனவே நடைமுறையிலுள்ள ஓய்வூதியத்திட்டத்திற்குப் பதிலாக இந்த வருடத்திலிருந்து அரச சேவையில் இணையும் ஊழியர்களுக்கானஓய்வூதியத்திட்டம்ஒன்றை அரசாங்கம் ஏற்கனவே முன்மொழிந்திருந்தது.

இது தொடர்பான கருத்துக்களைப் பெறும் கலந்துரையாடல் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பொழுது அரச ஊழியர் தனது சம்பளத்திலிருந்து ஓய்வூதிய நிதியத்திற்கு தனது பங்களிப்பைச் செய்யவேண்டும்.

அரசாங்கமும் அதற்கான பங்களிப்பை வழங்கும். ஓய்வு பெற்றதன் பின்னர் இந்நிதியத்திலிருந்து ஓய்வூதியத்தைப் பெறமுடியும்.

சிலநாடுகளில் இந் நடைமுறை தற்போதுமுள்ளது. சில தொழிற்சங்கங்கள் ஆரம்பத்தில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (3)

# செய்தித்துளிகள்

## வைத்தியசாலையில் பண மோசடி

காலி மாநகர சபையின் கீழ் இயங்கும் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அருகில் உள்ள வாகன தரிப்பிடமானது கேள்விப்பத்திரம் ஊடாக தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை குறித்த கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொண்ட நபர் குறித்த இடத்தில் அவரின் சேவையாளர்கள் சிலரை பணியில் நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த இடத்தில், நிறுத்தப்படும் வாகனங்களுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் அதிகமாக வசூலிக்கப்படுவதாக பலர் விசனம் தெரிவித்துள்ளனர். குறித்த இடத்தில் மோட்டார் சைக்கிளுக்கு 5 நிமிடத்திற்கு 20 ரூபாய்களை வசூலிப்பதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (இ)

## பொலிஸார் அதிரடி சுற்றிவளைப்பு புத்தர் சிலையுடன் நால்வர் கைது

திகாரிய பகுதியில் செப்பு உலோகத்திலான புத்தர் சிலையுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி நால்வரும் நிட்டம்புவை திகாரிய பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட புத்தர் சிலை ஒரு கிலோ 110 கிராம் நிறையுடையது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்தனகல்ல உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## பல்லகெட்டுவ பகுதியில் அனுமதியின்றி துப்பாக்கிகள் வைத்திருந்தவர் கைது

பதுளை - எல்ல - பல்லகெட்டுவ பகுதியில் அனுமதியின்றி துப்பாக்கிகள் வைத்திருந்த ஒருவர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பினையடுத்து சந்தேகநபர் இரு கைத்துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் துப்பாக்கிகளை வேட்டையாடுவதற்கு பயன்படுத்தியமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபரை பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

கதிர்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எஹலஹாவத்த, கலஹிட்டியப் பகுதியில் தனது வீட்டில் வெல்டிங் வேலை செய்துகொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி நபரொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கதிர்காமப் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய தனுஷ்க மதுசான் என்பவரே வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் உயிரிழந்துள்ளார்.

சடலம், கதிர்காமம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## வீட்டுக்குள் புகுந்தது அரச பேருந்து

பூண்டுலோயா துனுக்கேதெனிய பிரதேசத்தில் அரச பேருந்து ஒன்று நேற்றுக் காலை சேவையை ஆரம்பிக்கும் போது ஏற்பட்ட இயந்திரக்கோளாறு காரணமாக பாதையை விட்டு விலகி வீடு ஒன்றின் மீது மோதியதில் பேருந்தும் வீடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

ஹட்டன் டிப்போவிற்கு சொந்தமான இந்த பேருந்து இரவு வேளையில் இப்பிரதேசத்திலேயே நிறுத்தி வைக்கப்படும்.

காலையில் பூண்டுலோயா நகரத்திலிருந்து ஹட்டனுக்கு தனது சேவையை தொடர்ந்து வந்துள்ளது.

இவ்வாறான் நிலையிலேயே நேற்றுக்காலை சேவையை ஆரம்பிக்கும் போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (இ)

## தீர்த்த உற்சவம் நாளை

(கரணவாய்)

யாழ்.பருத்தித்துறை-தும்பளை தம்புருவளை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் மாசிமகா மகத்தை முன்னிட்டு தீர்த்த உற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (இ-5-60)

# இனவாதத் துணையுடன் புதிய கட்சி தொடங்கும் ராஜபக்ஷக்கள்!



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு ஒரு போதுமே விலகிச் செல்லாதவன் என்றும் அக்கட்சி நெருக்கடி களைச் சந்தித்த கால கட்டங்களில் எல்லாம் அதைக் கட்டிக்காப்பதற்காக தலைமைத்துவத்துடன் உறுதுணையாக நின்று பாடுபட்டவன் என்றும் தன்னைக் கூறிக் கொள்வதில் எப்போதுமே பெருமைப்படுபவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் பிள்ளைகளான சந்திரிகா குமாரதுங்க மற்றும் அநுரா பண்டாரநாயக்க போன்றவர்களே விலகிச் சென்ற போதிலும் கட்சியை விட்டு வெளியேறி துரோகம் செய்ய நினைக்காதவன் என்று தன்னைக் கூறிக் கொள்வதன் மூலமாக பண்டாரநாயக்கவின் அரசியல் வாரிசுகளை விடவும் நேர்மையும் விசுவாசமும் கொண்டவனாகவும் ராஜபக்ஷ தன்னைக் காட்டிக் கொள்வதை வழக்கமாகவும் கொண்டிருந்தார். டி.எஸ்.சேனநாயக்கவின் அரசாங்கத்தை விட்டு பண்டாரநாயக்க வெளியேறி 1951 ஆம் ஆண்டில் சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தபோது அவருடன் உடனடியாக துணை நின்றவர் தனது தந்தையாரான டி.ஏ.ராஜபக்ஷ என்பதால் சுதந்திரக்கட்சி மீது பண்டாரநாயக்க குடும்பத்துக்கு எந்தளவுக்கு உரிமை இருக்கிறதோ அதற்கு எந்தளவுக்கும் குறையாத உரிமை ராஜபக்ஷ குடும்பத்திற்கும் இருக்கின்றதென்ற உணர்வைக் கொண்டவர் மகிந்த ராஜபக்ஷ. அவர் ஜனாதிபதியாகப் பதவி வகித்த 9 ஆண்டுகளில் பண்டாரநாயக்கவை நினைவு கூருவதிலும் பார்க்க ராஜபக்ஷவை நினைவுகூருவதற்கே கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறாக சுதந்திரக் கட்சி மீது உரிமை பாராட்டி வந்த மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் அக்கட்சியை விட்டு வெளியேறி புதியதொரு கட்சியை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. கடந்த வருடம் ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பிறகு தனது அரசியல் நடவடிக் கைகளுக்காக கொழும்பு நாரஹேன்பிட்டி அபயராமய விகாரை வளாகத்தைப் பயன்படுத்தி வந்த ராஜபக்ஷ இப்போது ராஜகிரியவில் புதிய அரசியல் அலுவலகம் ஒன்றையும் கடந்த வாரம் திறந்து வைத்திருக்கிறார். ஊடகவியலாளர்களைச் சந்திக்கின்ற வேளைகளில் எல்லாம் புதிய கட்சியையும் அதன் அபிலாசைகளையும் பற்றிய பிரசுரங்கள் விரைவில் வெளியிடப்படுமென்று அவர் கூறுகின்றார். முதலில் சுதந்திரக்கட்சியை விட்டு வெளியேறி புதிய கட்சி தொடங்குவது பற்றி ஒருவித தயக்கத்துடன் இருந்த ராஜபக்ஷ இப்போது வெளிப்படையாகவே புதிய கட்சி பற்றிப் பேசுகின்றார். அவரது ஆட்சிக் காலத்தில் பெரும் வல்லமை கொண்டவர்களாக விளங்கிய அவரது சகோதரர்களும் புதிய கட்சியில் முக்கிய பாத்திரங்களை வகிக்கப் போகின்றார்கள் என்பதில் சந்தேகமில்லை. முன்னாள் சபாநாயகரான மூத்த சகோதரர் சமல் ராஜபக்ஷ புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்து சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தும் முயற்சியை விரும்பவில்லை என்று செய்திகள் வெளியாகியிருக்கின்ற போதிலும் சகோதரர்களின் முயற்சிகளைத் தடுக்கக் கூடிய அளவுக்கு அவர் வலிமை கொண்டவராக இல்லை என்பது வெளிப்படையானது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு சுதந்திரக் கட்சிக்குள்ளும் அதன் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள்ளும் ஏற்பட்ட மாற்றங்களின் பின்புலத்திலேயே புதிய கட்சியைத் தொடங்குவதற்கான ராஜபக்ஷக்களின் முயற்சிகளை நோக்க வேண்டியிருக்கிறது.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன 2014 நவம்பரில் ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்து அமைச்சர் பதவியைத் துறந்து வெளியேறி ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய போதிலும் சுதந்திரக் கட்சியில் இருந்து தான் வெளியேறவில்லை என்றே சிறிசேன அப்போது கூறிக் கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியினதும் சிறுபான்மையினக் கட்சிகளினதும் வாக்குகளே சிறிசேனவின் வெற்றிக்கு முக்கிய காரணியாக இருந்தன. ராஜபக்ஷ ஆட்சியில் நிலவிய எதேச்சாதிகாரப்போக்கு, குடும்ப அரசியல் ஆதிக்கம், ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகம், சட்டத்தின் ஆட்சியின் சீர்குலைவு ஆகியவற்றினால் வெறுப்படைந்த சிங்கள மக்களில் மிதவாதப் போக்குடையவர்களின் வாக்குகளும் சிறிசேனவுக்கே கிடைத்தன.

ஆனால், சுதந்திரக் கட்சியினதும் அதன் தலைமையில் அமைந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்துவக் கட்சியினதும் வாக்குகளும் கடும்போக்கு சிங்கள பௌத்த சக்திகளின் வாக்குகளும் ராஜபக்ஷவுக்கே கிடைத்தன.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு தனது சொந்த ஊரான தங்காலைக்குச் சென்று ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய ராஜபக்ச, சிங்கள மக்களிடம் தான் தோற்கவில்லை என்றும் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியானது ஈழம் வாக்குகளால் கிடைத்தது என்றும் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

அடிப்படையில் சுதந்திரக் கட்சியின் ஆதரவுத் தளம் மகிந்த ராஜபக்ஷவுடனேயே இருந்தது.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பிறகு சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை சிறிசேனவுக்கு ராஜபக்ஷ விட்டுக்கொடுத்த போதிலும்கூட, கட்சியை முழுமையாக தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர ஜனாதிபதியினால் முடியவில்லை. இன்றுவரை அந்த நிலைமையே பெருமளவுக்குத் தொடருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சிறிய அங்கத்துவக் கட்சிகளான தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி மற்றும் உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெல உறுமய போன்ற சிறிய கட்சிகளைப் பொறுத்தவரை சுதந்திரக் கட்சி போன்ற பிரதான கட்சியொன்றுடன் அணி சேர்ந்து நிற்காவிட்டால் அரசியல் அரங்கில் அநாமதேயங்களாகிவிடக்கூடிய ஆபத்து இருந்தது. இக்கட்சிகள்தான் ஜனாதிபதித் தேர்தலின் தோல்வியடைந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியல் களத்தில் முக்கியமானவராக்கும் முயற்சி களைத் தொடங்கின. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கூட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சிறிய கட்சிகளின் பிரசாரங்களின் பின்னால் அணி திரண்டார்கள். இந்தப் பிரசாரங்களின் உச்சமே 2015 ஓகஸ்ட் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரசாரங் களுக்கு தலைமை தாங்கும் பொறுப்பை ராஜபக்ஷ தனதாக்கிக் கொள்ளக் கூடிய சூழ்நிலையை உருவாக்கியது. சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் தலைவராக ஜனாதிபதி சிறிசேன இருந்தபோதிலும் அந்த முன்னணியின் பொதுத் தேர்தல் பிரசாரங் களிலும் ஏனைய செயற்பாடுகளிலும் அவரால் எந்த வகையிலும் செல்வாக்கைச் செலுத்தக்கூடியதாக இருக்கவில்லை.

(தொடரும்)

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவ்வற்றை அம்பலப்படுத்தி விடும். – மெர்ரி கிளாட்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# விமல் வீரவன்ஸவுக்கு ஓர் அன்பு மடல்

விமல் வீரவன்ஸவுக்கு அன்பு வணக்கம். இன்று வரை பேரினவாதத்தை கைவிடாத தங்களின் மன வக்கிரம் கண்டு அதிர்ந்து போனவர்களில் நானும் ஒருவன்.

அரசியல் அனுபவம், துணிச்சல், பேச்சாற்றல் என்ற சிறப்பம்சங்கள் தங்களிடமிருந்தும் அவை யனைத்தும் இனவக்கிரத்தைத் தூண்டுவதற்காக செலவிடப்படுவதைக் கண்டு வேதனை கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

இனவாதம் பேசிப்பேசியே தமிழ் மக்களுக்கு எதிரான போக்கை நிலைநாட்டிவரும் தாங்கள் என்றோ ஒருநாள் இதற்கான தண்டனையை அனுபவித்தாக வேண்டும் என்பதில் எந்தமறுதலிப்பும் இருக்க முடியாது.

இது ஒருபுறம் இருக்க; தங்களின் பேச்சு நுட்பங்கள், அரசியல் கருத்துக்கள் குறித்து கவனம் செலுத்தும் நமக்கு, நேற்று முன்தினம் தாங்கள் திருகோணமலையில் நடந்த மக்கள் சந்திப்பொன்றில் பங்கேற்று கருத்துரைக்கையில்,

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை இடம்பெற்றால் அதன் ஆபத்துக்களைப் பட்டியல்படுத்தியுள்ளீர்கள்.

ஒரு நாட்டில் இராணுவத்தினரால் அந்த நாட்டின் பிரஜைகள் கொல்லப்பட்டிருந்தால், அதனை சர்வதேச விசாரணைகள் மூலம் நிரூபித்து பாதிக்கப்பட்ட இனம் தனி நாடு கோர முடியும் எனக் கூறியுள்ளீர்கள்.

இதன்மூலம் ஓர் உண்மையை நீங்கள் கூறியிருப்பது கண்டு அதிசயிக்காமல் இருக்க முடியாது. அதாவது இலங்கையில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையை தாங்கள் ஏற்றுள்ளீர்கள்.

நல்லது தமிழ் மக்கள் தனி நாடு கேட்டுவிடுவதை தடுப்பதற்காக சிங்கள மக்களிடம் நீங்கள் ஒரு உண்மையை கூறவேண்டிய தேவையிருந்துள்ளது.

ஆக, உங்களின் பயமெல்லாம் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட உண்மையை சர்வதேச விசாரணை நிரூபித்து விட்டால், தமிழர்களுக்கு தனிநாடு வழங்க வேண்டி வந்துவிடும் என்பதுதான்.

தமிழினத்தை இந்த நாட்டின் ஆட்சி அதிகாரங்கள் காலத்துக்குக் காலம் கொன்றொழிக்கின்ற போதிலும் தமிழ்மக்கள் பேரினவாதப் பிடிக்குள் இருக்க வேண்டும் என நீங்கள் விரும்புவதற்குக் காரணம்,

காலத்திற்கு காலம் இன அழிப்பிற்கு தமிழ் மக்கள் தேவையென்றோ அல்லது தமிழ் மக்களை முற்றாக அழித்தால் தான் இலங்கையை தனித்து வெளத்த சிங்கள நாடாக்க முடியும் என்பதற்காகவோ அவர்கள் உங்களோடு இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவதாக இருக்கலாம்.

இங்குதான் நீங்கள் ஒரு உண்மையை மறந்துள்ளீர்கள். அதாவது சர்வதேச விசாரணையை தமிழ் அரசியல் தலைமை வலியுறுத்தவில்லை என்பதை நீங்கள் அறியாதது ஆச்சரியமே.

ஐ.நா. சபையில் எழுந்து நின்று போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கேட்பதற்குத் தமிழர்களிடம் ஆட்கள் இல்லை. கேட்க வேண்டியவர்களும் விலைபோய்விட்டனர்.

ஆகையால் அன்புக்குரிய விமல் வீரவன்ஸ அவர்களே! சர்வதேச விசாரணை வந்துவிடும் என்று பயம் கொள்ளாதீர்கள்.

சர்வதேச விசாரணையை நீங்கள் விரும்பினால் கூட, எங்கள் தமிழ்த் தலைமைகள் ஒருபோதும் விரும்பமாட்டா. ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து அவர்களுக்கு நிறைந்த இலாபம் கிடைக் கின்றது.

எனவே தமிழ் மக்களுக்காகக் கதைப்பதை விட தமிழ் மக்களுக்காகக் கதைப்பது போல நடித்து ஆட்சியாளர்களுக்கு உதவுவது சுயநன்மை தரும் என்ற உண்மை அவர்களுக்குத் தெரியும் என்பதால் அவர்கள் ஒருபோதும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தப் போவதில்லை.

ஆகையால் தேவையற்ற மனப் பிரம்மையைக் கைவிடுவது உங்களுக்கும் நாட்டுக்கும் நல்லது.

# வேலையில்லா பட்டதாரிகள் சங்கம் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்பபை வழங்குமாறு கோரி, முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் தாக்குதல்கள் தொடர்பில், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக, வேலையில்லாப்பட்ட தாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் முறைப்பாட்டை முன்வைக்கவுள்ளதாக, அந்த சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தம்மிக முனசிங்க தெரிவித்தார்.

வேலையில்லா பட்டதாரிகள் தமக்கு வேலை பெற்றுத் தருமாறு கோரி, கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் எதிர்ப்பு பேரணி ஒன்றினை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து லோட்டஸ்ட் வீதியில் வைத்து குறித்த பேரணி மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

போராட்டக்காரர்களின் நோக்கம் தமது கோரிக்கைகளை பிரதமரிடம் ஒப்படைப்பதே. எனினும் பொலிஸார் தலையிட்டு ஆர்ப்பாட்டக் காரர்களை கலைத்தனர். அவர்கள் மேற்கொண்ட தாக்குதல் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக, தம்மிக முனசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# தீர்த்த உற்சவம்

(கரணவாய்)

பருத்தித்துறை வியாபாரி மூலை பத்திரகாளி சமேத ஆதிசிவ வீரபத்திர சுவாமி ஆலயத்தில் மாசி மகா மகத்தை முன்னிட்டு தீர்த்த உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5-60)

# செயலமர்வு

(சித்தன்கேணி)

கைகொடுக்கும் நண்பர்களுக்கான சிறிலங்கா சுமித்திரயோ கிளையின் யாழ். கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள செயலமர்வு ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இல.104, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் தொண்டர்கள் கலந்து கொள்ளமுடியும் என யாழ்.கிளையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5-17)

# விசேட செயலமர்வு இன்று

தென்மராட்சி வலய கல்வி பணிமனையானது வேல்ட் விசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தவுள்ள சுகாதார மேம்பாடு தொடர்பாக விசேட செயலமர்வு ஒன்று இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் 22 பாடசாலைகளைச் சேர்ந்த சுகாதார குழுவிற்கு பொறுப்பான ஆசிரியர் ஒருவரும் சுகாதார குழுவில் அங்கம் வகிக்கும் மாணவர்களில் 3 பேரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-88)

# கழிவுகளை கொட்ட சென்றவர்கள் கையும் மெய்யுமாக அகப்பட்டனர்

செம்மணி வீதியில் குப்பைகளை கொட்டுவதற்காக கழிவுப்பொருட்களுடன்சென்று கொண்டிருந்த நீல நிற கன்ரர் ரக வாகனமொன்றை மறித்த யாழ்.மாநகரசபையின் பணியாளர்களும் உத்தியோகத்தர்களும் அதில் பயணித்தவர்களை கையும்மெய்யுமாகப் பிடித்து யாழ் சுற்றுச் சூழல் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (இ

# இரத்ததானம்

(கரணவாய்)

இரத்ததானநிகழ்வுநாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பொலிகண்டி குழந்தையேசுதேவாலயவளாகத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக் கொடையாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (இ-5-60)

# இல்ல மெய்வல்லுநர் போட்டியும் கலையரங்கு திறப்பு விழாவும் இன்று

(இருபாலை)

புத்தூர் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியும் கலையரங்கதிறப்புவிழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் பொ.வரதகுலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக புத்தூர் மெதடிஸ்த தேவாலய அருட் சகோதரி ஜெயகுமாரி இரட்ணசிங்கம் கோப்பாய் கோட்டக்கல்வி பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா, தென்மராட்சி ஓய்வுநிலை பிரதிக் கல்வி பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக புத்தூர் கிழக்கு கிராம சேவையாளர் வீ.கோபாலதாஸ், புத்தூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அனுதர்ஷன், பாடசாலை அரங்கு அன்பளிப்பாளரும் நலன்விரும்பியுமான மு.சந்திரமௌலீசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (இ-5-136)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் சட்ட உத்தியோகதத்தர் பதவிக்காக பின்வரும் தகைமைகள் கொண்ட இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி/ தொழில் தகைமைகள்: பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பாக பட்டம் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

அனுபவம்: உயர்நீதி மன்றத்தில் சட்டத்தரணி யொருவராகச் சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர் 3 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.03.17 அன்று. வயது 21 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் 2016.03.17 ஆம் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு செயலாளர் கல்வியமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 2016.02.19இல் வெளியான வாத்தமானியில் பார்வையிடவும். (இ

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங் களில் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும்.

அந்தவகையில் 21.02. 2016 ஞாயிறு, யாழ்.பிரதேசத்தில் உடுப்பிட்டி V.C, நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பட்டி சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ் நிலையத்தடி, வல்வெட்டித்துறைசந்தி, உடுப்பிட்டி வாசிக சாலை சந்தி, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி, நாவாந்துறை, மீனாட்சிபுரம் வீதி, முத்தமிழ் வீதி, வில்லூன்றி, பண்ணைப் பிரதேசம், குருநகர், குருநகர் தொடர் மாடி கட்டடத்தொகுதி, டேவிட வீதி (கடற்கரை வீதி சந்தி) கொன்வென்ட் பிரதான வீதி, கடற்கரை வீதி (பழைய பூங்கா வீதி சந்தி), ஊர்காவற்றுறைப் பிரதேசம், நாரந்தனை, மயிலப்புலம், மடத்துவெளி, ஆலடி சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகாட்டுவான், செட்டிப்புலம், வங்களாவடி, வேலணை, புங்குடுதீவு கடற்படைமுகாம், ஊர்காவற்றுறை நீதிமன்றக்கட்டடத் தொகுதி, நாரந்தனை நீர்ப்பாசன திணைக்களம், குருநகர் ஐஸ் தொழிற்சாலை, சீனோர், ஸ்ரீலங்கா ஐஸ் தொழிற்சாலை, நிபாட் வலைத் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் நாவற்காடு, கேப்பாபுலவு, வற்றாப்பளை, முல்லைத்தீவு விமானப்படை-I மற்றும் II, முல்லைத்தீவு 59 ஆவது படைப்பிரிவு (14ESR-01 மற்றும் 14ESR- 02), SFHQ வற்றாப்பளை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல்தோட்டம் கிராமம் ஆகிய இடத்திலும் மனனார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார்குளம், மணல்குளம், சூரியகட்டைக்காடு, CECB ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைபட்டிருக்கும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



மெல்லெனப் பனி பெய்கிறது. அதை யாரும் காண்ப தில்லை, கேட்பதுமில்லை. எனினும் அழகிய ரோஜாக் களை அது எவ்வளவு அற்புதமாக மலரச் செய்து விடுகிறது. சிந்தனை உலகிற்குத் தன் நன் கொடையை வழங்கியதும் இவ்விதமே.

தேவாலயத்திற்குப் போவதோ, நெற்றியில் சின்னங்களை இட்டுக் கொள்வதோ விசித்திரமாக உடை அணிந்து கொள்வதோ மதம் ஆகிவிடாது.

நீ ஒரு ரிஷியாகாதவரை, உனக்கு ஆன்மீக வாழ்க்கை இல்லை. நீ ரிஷியான பிறகே உங்களுக்கு ஆன்மீகம் என்பது ஆரம்பமாகிறது.

யாருடைய வழிகாட்டுதலும் இல்லாமல் உங்களால் எதையும் செய்யமுடியும். எல்லா ஆற்றலும் ஆன்மாவில் இருக்கிறது. எழுந்திருங்கள்! உங்கள் உள்ளிருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துங்கள்.

முதலில் இதயபூர்வமான உணர்ச்சி. அறிவிலும் ஆராய்ச்சியிலும் என்ன இருக்கிறது? அது சில அடிகள் செல்லும், பிறகு நின்றுவிடும். ஆனால் இதயத்தின் மூலம் தான் உத்வேகம் பிறக்கிறது. திறக்க முடியாத கதவுகளை எல்லாம் அன்பு திறக்கிறது. பிரபஞ்சத்தின் எல்லா இரகசியங்களுக்கும் வாசல் அன்புதான்.

## விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக்கிண்ணம்

# கொக்குவில் கே.சீ.சீ.சீயை வீழ்த்தி இறுதிப்போட்டியில் யாழ்.பல்கலை



விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் வளர் மதி விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தி வரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப் பாட்ட சுற்றுப்போட்டியின் 5 ஆவது தகுதி காண் போட்டி அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்.பல்கலைக்கழக அணி கே.சீ.சீ.சீ. அணியை 53 ஓட்டங்க ளால் வெற்றி பெற்று தனது மூன்றா வது வெற்றியை பதிவு செய்வதன் மூலம் இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 30 ஓவர்க ளில் 9 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களை பெற்றன.

துவாரகா-28, நில்விகா-26 , தனன்ஜெயன்-17, குருகுலசூரிய - 18, சற்குணேஸ்வரன் -15 ஓட்டங் களை பெற்றனர். களத்தடுப்பில் கே.சீ.சீ.சீ அணியை சார்ந்த பிர தீபன்-02, சிலோறன், சாம்பவன், ராகுலன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.சீ. சீ.சீ.அணி 25 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 107 ஓட்டங் களைப் பெற்றனர். சத்யன்-22, ஜனுதாஸ்- 15, ராகுலன்-13, உத்த மன்-11, ஆதித்தன்-12 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் யாழ்.பல்கலைக் கழக அணியை சேர்ந்த வைகுந் தன் -01, தரணிதரன் -03, குருகுல சூரிய -03, டிக்ஸன்-02 இலக்கு களை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத் தும் தரவரிசை பட்டியலுக்கு யாழ். பல் கலைக்கழக் அணி 6.13 புள்ளிகளை யும் கே.சீ.சீ.சீ. அணி 1.97 புள்ளிக ளையும் பெற்றுக் கொண்டனர்.(க)

## சென்.தோமஸ்-மத்திய கல்லூரி டெஸ்ட் ஆட்டம் சமநிலையானது

மாத்தளை சென்.தோமஸ் கல் லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரி க்கும் இடையிலான நட்பு ரீதியி லான டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

மாத்தளை சென்.தோமஸ் கல் லூரியின் மைதானத்தில் அண் மையில் இடம்பெற்ற இந்த ஆட்ட த்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட் சமாக பிரியலக்சன் 57 ஓட்டங்க ளையும், கோமேதகன் 47 ஓட்டங் களையும் கிருபாகரன் 29 ஓட்டங் களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் மாத்தளை சென். தோமஸ் கல்லூரியின் சார்பில் பந்துல 5 இலக்குகளையும், அவ நாய 3 இலக்குகளையும் வீழ்த்தி னர்.

தனது முதலாவது இன்னிங் ஸுக்காக பதிலுக்கு துடுப்பெடுத்தா டிய மாத்தளை சென். தோமஸ் கல் லூரி அணி 109 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிக பட்சமாக சில்வா 27 ஓட்டங்களை யும், டில்சாந் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரியின் சார்பில் கிரு பாகரன் 4 இலக்குகளையும், அலன்ராஜ் 3 இலக்குகளையும், தசோபன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து களத்தடுப்பு செய்ய தகுதியற்ற நிலையில் இரண்டாம் இன்னிங்ஸுக்காக களமிறங்கியது மாத்தளை சென். தோமஸ். இரண் டாவது இன்னிங்ஸில் அந்த அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்ப டுத்தியது. இதன்படி சகல இலக்குக ளையும் இழந்து 319 ஓட்டங்க ளைப் பெற்றது. அதிகபட்சமாக பந் துல 107 ஓட்டங்களையும், டில்சாந் 83 ஓட்டங்களையும் நிரோசன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல் லூரியின் சார்பாக அலன்ராஜ் 3 இலக்குகளையும் கிருபாகரன், தசோபன் இருவரும் தலா இர ண்டு இலக்குகளையும் வீழ்த் தினர்.

219 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி இர ண்டாம் நாள் முடிவில் 6 இலக்கு களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் சமநிலையானது. அதிகபட்சமாக கிருபாகரன் 53 ஓட்டங்களையும், பிரியலக்சன் 50 ஓட்டங்களையும், ஸ்ரிபன்ராஜ் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மாத்தளை சென். தோமஸ் கல்லூரியின் சார் பில் டில்சாந் 5 இலக்கை வீழ்த் தினார். (க)

## கரவெட்டி பிரதேச செயலக கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பம்

கரவெட்டி பிரதேச செயலக விளை யாட்டு விழாவின் ஒரு அங்கமான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயி ற்றுக்கிழமை கொலின்ஸ் விளை யாட்டுக் கழக மைதானம்(பழையது) மைக்கல் விளையாட்டுக்கழக மைதா னம் மற்றும் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் மத்தொளி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சோளங்கன் விளையாட்டுக்கழக மும் கொலின்ஸ் விளையாட்டுக் கழ கத்தை எதிர்த்து பொம்மர்ஸ் விளை யாட்டுக்கழகமும் தவசக்தி விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து ஸ்ரீ முரு கன் விளையாட்டுக் கழகமும் கலை மதி விளையாட்டுக் கழக த்தை எதிர் த்து றேஞ்சஸ் விளையாட் டுக்கழ கமும் கொலின்ஸ் (பழைய) விளை யாட்டுக்கழக மைதானத்தில் மோதவு ள்ளது.

மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள போட் டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் பிரதி விளையாட்டுக்கழகமும் இமையா ணன் இளைஞர் விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து கிழவி தோட்டம் விளையாட்டுக்கழகமும் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மனோகரா விளை யாட்டுக்கழகமும் கொம்மாந்தறை விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து நியூட்டன் விளை யாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

இமையாணன் மத்தி விளையாட் டுக்கழக மைதானத்தில் நடைபெற வுள்ள போட்டியில் கருணாகரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக்கழகமும் அண்ணாசிலையடி விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளை யாட்டுக்கழகமும் ஐங்கரா விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவைச் சுடர் விளையாட்டு க்கழகமும் இமை யாணன் மத்தி விளையாட்டுக் கழக த்தை எதிர்த்து மகேசன் விளையாட் டுக்கழகமும் மோதவுள்ளன. (க)

## இறுதிப்போட்டியில் புதுமடம் வைகறை

உடுவில் உதயசூரியன் விளை யாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெற்ற முதலாவது அரையிறு தியா ட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து உடுவில ஆலடி சிந்து அணி மோதிக் கொண் டது.

இதில் புதுமடம் வைகறை அணி 4:3 என்ற புள்ளிகளின் அடிப்ப டையில் வெற்றிபெற்று இறுதியாட்ட த்துக்கு தகுதி பெற்றது. (க)

## சதுரங்க சுற்றுத்தொடர் கிளிநொச்சியில் இன்று ஆரம்பம்

இலங்கைப் பாடசாலைகள் சது ரங்கச் சங்கத்தின் நடப்பு வருடத் துக்கான மாவட்ட மட்ட சதுரங்கத் தொடர்களில் கிளிநொச்சி மாவட்டத் தொடர் இன்று சனிக்கிழமை ஆரம் பமாகவுள்ளது.

கிளிநொச்சி வலயக்கல்வி அலு வலகத்தின் ஒழுங்குபடுத்தலில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தொடர் நடைபெறவுள்ளது. 7 வய துப் பிரிவு, 9 வயதுப் பிரிவு, 11 வய துப் பிரிவு, 13 வயதுப் பிரிவு, 15 வய துப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 20 வய துப் பிரிவு ஆகிய வயதுப் பிரிவு களில் தொடர் நடைபெறும்.

15 வயது, 17 வயதுப் பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுப வர்களும், குறித்த பிரிவுக ளில் பங்கு பற்றும் 6 மாணவர்களுக்கு ஒரு மாணவர் என்ற வீதத்திலும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்ற முடியும்.

7 வயதுப் பிரிவு, 9 வயதுப் பிரிவு, 11 வயதுப் பிரிவு, 13 வயதுப் பிரிவுகளில் குறிப்பிட்ட புள்ளிக ளுக்கு மேல் பெறுபவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியும். (க)

## மாவட்ட மட்ட வலைப்பந்தாட்ட போட்டி யாழ். பல்கலைக்கழக அணி முதலிடம்



யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் கடந்த சனி,ஞாயிறு தினங் களில் நடத்திய பதிவு செய்த கழகங் களுக்கிடையிலான வலைப்பந்தாட் டச் சுற்றுப்போட்டி 2015/2016 இல் யாழ்.பல்கலைக்கழக வலைப்பந் தாட்ட அணியானது முதலாம் இடத் தினைப் பெற்று வெற்றிக்கிண்ணத் தைச் சுவீகரித்துக்கொண்டது.

இப்போட்டியின் குழுநிலைப் போட் டியில்சென்.அன்ரனிஸ்அணியைஎதி ர்த்து விளையாடிய யாழ்.பல்கலைக் கழக அணி 49:00 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. இர ண்டாவது போட்டியில் தெல்லிப் பழை கிராஸ்கொப்பர்ஸ் அணியினை எதிர்த்து விளையாடி 18:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

காலிறுதிப்போட்டியில் ஜொலி ஸ்ரார்ஸ்அணியினை எதிர்த்துவிளை யாடி 29:15 என்ற புள்ளி அடிப்படை யில் வெற்றிபெற்றது. ஞாயிற்றுக் கிழமை காலை இடம்பெற்ற அரை யிறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் விளையாட்டுக் கழகத்தினை எதிர் த்து விளையாடி 24:22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று இறு திப்போட்டிக்குத் தெரிவானது. அன்று மாலை நடைபெற்ற விறுவிறுப்பான இறுதிப்போட்டியில் மீண்டும் தெல் லிப்பழை கிராஸ்கொப்பர்ஸ் அணி யினை எதிர்த்து விளையாடிய யாழ். பல்கலைக்கழக அணி 34:33 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியின் வலைப்பந்தா ட்ட ராணியாக (Netball Queen) யாழ்.பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த செல்வி.சாம்பவி ரமணனும் சிறந்த களக்காப்பாளராக (Best Defender) யாழ். பல் கலைக்கழக அணியைச் சேர்ந்த செல்வி.துஸ் யந்தி குணசீலனும் சிறந்த மத்திய தள வீராங் கனையாக (Best Center Court Player) யாழ். பல்க லைக்கழக அணியைச் சேர்ந்த செல்வி விதுரா அருணாச்சலமும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்.பல் கலைக்கழக வலைப் பந்தாட்ட அணியின் பயிற்றுநராக திருமதி ஜெ.சரவணபவஜயரும் முகாமையாளராக யாழ். பல்கலை க்கழக உடற்கல்விப் பணிப்பாளர் க.கணேசநாதனும் செயற்பட்டிரு ந்தனர். (க)

## கரைச்சி பிரதேச செயலக இருபாலாருக்குமான கரப்பந்து

### புதிய பாரதி, மகாதேவா வெற்றி

கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்கான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் புதியபாரதி விளையாட்டுக் கழக அணியும், பெண்கள பிரிவில் மகாதேவா விளையாட்டுக்கழக அணியும் வெற்றிபெற்றுள்ளன.

இரணைமடு ஆதவன் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் புதியபாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் புதியபாரதி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் மகாதேவா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விபுலா னந்தா அணி மோதிக் கொண்டது. இதில் மகாதேவா விளையாட்டு க்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (க)

# தமிழ் பேசும் ஆளுநர்...

வடமாகாண புதிய ஆளுநராக வந்திருக்கும் ரெஜினோல்ட் குரே தமிழ் பேசக் கூடியவராக இருப்பது மகிழ்ச்சியளிப்பதாக வட மாகாண. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் தனது கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஆசிரியராக இருந்தவர் கொடுத்துத்தான் பழக்கம். யாரையும் கெடுத்துப் பழக்கமிருக்காது. பல தகைமைகள் உள்ள ஒருவராக இவர் இருக்கின்றார். விஜயகுமாரதுங்கவின் கட்சியில் இருந்தவர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை கவனத்தில் கொள்வார். இவர் தமிழ் பேசும் தகுதி கொண்டவர் என்பதால், ஒவ்வொருவரும் கூறும் விடயங்களின் மனோ நிலை என்ன என்பது இவரால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மேலும் இவர் அரசியல் அனுபவமும் கொண்டவர் என்பதால், மக்களின் எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வார் என்ற நம்பிக்கையும் உள்ளது.

இவரை நியமித்தமைக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார். (செ-12)

# குளவி கொட்டியதில் குடும்பப்...

மணியளவில் அராலி தெற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சாந்தலிங்கம் பிறேமா (வயது 49) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த வீட்டுக்கு அருகில் உள்ள காணி ஒன்றில் பிரஸ்தாப பெண் விறகு வெட்டிக்கொண்டிருந்த வேளை எதிர்பாராத விதமாக அங்கிருந்த குளவிக்கூடு கலைந்ததிலேயே இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

கலைந்த குளவிகள் குடும்பப் பெண்ணின் தலை மற்றும் முகப் பகுதிகளில் கடுமையாக கொட்டி காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (செ-12,30)

# அனுமதி அட்டைகள் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படவுள்ள சட்டமாணித் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே இது வரை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (செ)

# விடுவிக்கப்பட்டார் ஷிராணி...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் சொத்துக்கள் மற்றும் உடமைகள் குறித்த விபரங்களை முழுமையாக சமர்ப்பிக்க தவறியதாக முன்னாள தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கா மீது குற்றஞ்சுமத் தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஊழல் விசாரணை ஆணைக் குழுவிடம் மனு ஒன்றை சமர்ப்பித்த ஷிராணி பண்டாரநாயக்கவின் சட்டத்தரணிகள், இந்த குற்றச்சாட்டுக்கள் பழிவாங்கும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டதாக அதில் கூறியிருந்தனர்.

அடிப்படையற்ற இந்த குற்றச்சாட்டுக்களில் இருந்து அவரை விடுவிக்குமாறும் அவர்கள் கோரியிருந்தனர்.

அதன் அடிப்படையில் நேற்று அவர் குறித்த வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, அவர் மீதான குற்றச்சாட்டுக்களை முன்னெடுக்க விரும்பவில்லை என்று ஆணைக்குழு நீதிமன்றத்தில் அறிவித்ததால், அவரை குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை செய்வதாக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் நீதிமன்ற கட்டுப்பாட்டில் இருந்த அவருடைய கடவுச்சீட்டையும் விடுவிப்பதற்கு நீதிபதி உத்தரவிட்டார். (செ-12)


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின்
மாபெரும் யாழ் மற்றும் கிளிநொச்சி இளைஞர்
யுவதிகளுக்கான அபிவிருத்தி மாநாடு





இடம் - வீரசிங்கம் மாநாட்டு மண்டபம்
காலம் - 21.02.2016 ஞாயிறு
காலை 9.00 மணி

தலைமை
அங்கஜன் இராமநாதன்
பாராளுமன்ற உறுப்பினர்
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்மாவட்ட பிரதான
அமைப்பாளர் மற்றும் மத்திய குழு உறுப்பினர்
யாழ் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவர்

கருப்பொருள்
- இளைஞர் யுவதிகளின் இன்றைய தேவைகள்
- இளைஞர் யுவதிகள் எதிர்நோக்கும் சவால்கள்
- இளைஞர் யுவதிகளின் சமூக முக்கியத்துவம்

யாழ், கிளிநொச்சி இளைஞர் யுவதிகள் அனைவரையும் இம்
மாநாட்டில் பங்குபற்றி பயன்பெற அன்புடன் அழைக்கின்றேன்

அங்கஜன் இராமநாதன் - பா.உ
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, 80A, கோயில் வீதி, நல்லூர்.


# காணாமல்போனோரின் விசா...

அவர் மேலும் கூறுகையில்,

இறுதியுத்தத்தில் இராணுவம் வசம் சரணடைந்த பொதுமக்கள் தொடர்பில் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்வது சிறந்த விடயமாகும். உண்மைகளை கண்டறிய இது நல்லதொரு ஆதாரமாகும்.

குறிப்பாக காணாமல்போனதாகக் கூறப்படும் பொதுமக்கள் தொடர்பில் உண்மைகளை கண்டறியும் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஆணைக்குழுவின் கால எல்லையும் நீடிக்கப்பட்டுள்ளது. இந்த காலப்பகுதியில் காணாமல்போனதாக கூறப்படும் பொதுமக்கள் தொடர்பில் மேலும் ஆதாரங்களை திரட்ட வாய்ப்புக்கள் உள்ளன.

இராணுவ வசமுள்ள ஆதாரங்களை முன்வைப்பதன் மூலம் இநத செயற்பாடு இன்னும் இலகுவாக்கப்படும்.

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் நீதிமன்ற சுயாதீன செயற்பாடுகளுக்கென விசேட சட்ட மூலம் ஒன்றையும் இந்த ஆண்டு நடுப்பகுதிக்குள் கொண்டுவர தீர்மானித்துள்ளோம்.

ஆகவே போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் அரசாங்கம் தெளிவாக தமது நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில் எமக்கு கிடைககும் ஆதாரங்களை பூரணமாக முன்வைப்பதன் மூலமாக உண்மைகளை கண்டறிய வாய்ப்பாக அமையும்.

மேலும் யுத்த காலகட்டத்தில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் அதிக அக்கறை செலுத்தி வருகின்றது.

சர்வதேச ஒத்துழைப்பும் இந்த விடயத்தில் கிடைத்து வருகின்றது. எனவே இந்த விடயத்தில் காலம் கடத்தப்படாது வெகுவிரைவில் பொதுமக்களின்பிரசசினைகளுக்கும் ஏனைய பிரதான சிக்கல்களுக்கும் தீர்வை பெற்றுத்தர முடியும்.

அதேபோல் விடுதலைப் புலி பயங்கரவாதிகளுக்கு நிதி வழங்கியதாகவும் எழுந்துள்ள சில குறறச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை முனனெடுத்து வருகின்றது என்றார் ராஜித. (செ-12)

# சரணடைந்...

நாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை இராணுவத்தின் 58 ஆவது டிவிசனிடம் சரணடைந்தவர்கள் பற்றிய பட்டியலை ஒப்படைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சரணடைந்தவர்களின் பெயர் பட்டியல் 58 ஆவது டிவிசன் தலைமையகத்தில் இருக்கிறதா, இல்லையா என்பது குறித்து எனக்குத் தெரியாது.

ஆனால், நீதிமன்றம் ஊடாக இது தொடர்பாக விசாரணை இடம்பெற்று வரும் நிலையில், அந்த விசாரணைகளுக்கு இலங்கை இராணுவம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் .

காணாமற்போனவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணைக்கும் இராணுவம் முழுமையாக ஒத்துழைப்பைத் தரும்.

58 ஆவது டிவிசனிடம் சரணடைந்தவர்கள் தொடர்பாக நீதிமன்றில் விசாரணை இடம்பெற்று வருவதால், அது குறித்த மேலதிக தகவல்களை வெளிப்படுத்துவது பொருத்தமாக இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

# யோஷிதவின்...

இதையடுத்து, அந்த கைத் தொலைபேசி துரித விசாரணைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், ஜே விடுதிப் பகுதியில் ஏனையோர் நடமாடுவதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில், அந்த விடுதிப் பகுதியில் கைத்தொலைபேசிக்கான நுண்அலைகளைத் தடை செய்யும் கருவிகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சுடன், சிறைச்சாலைகள் திணைக்களம் பேச்சுக்களை நடத்தியுள்ளது. (செ-12)

# 36,430...

செய்துள்ள நிலையில் தற்போது இந்த வைத்தியசாலைகளில் 28,000 தாதியர்களே சேவையில் இருப்பதாக அகில இலங்கை தாதியர் சங்கத்தின தலைவர் காமினி குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மூன்று தாதியர் கடமையாற்ற வேண்டிய இடத்தில் ஒரு தாதி கடமை புரிவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே தற்போது உள்ள நிலையில் ஏற்கெனவே 1000 பேருக்கு தாதியர் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் இதன்எண்ணிக்கையை 5000 ஆக அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் தாதியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக நாட்டில் குறைந்தளவிலான பயிற்சி பாடசாலைகளேகாணப்படுவதாகவும் அதனூடாக விரைவில் அதிகப்படியான தாதியருக்கு பயிற்சியளித்து நாட்டில நிலவும தாதியர்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு தாதியர் சங்கத்தன் தலைவர் காமினி குமாரசிங்க தெரிவித்துள்ளார். (செ-12)

# பிரபாகரன்...

தெரிவித்துள்ளார்.

தமிழர் தேசிய இயக்க நிறுவனத் தலைவர் பழ.நெடுமாறன் அத்திக்கடவு அவினாசி திட்டத்தை வலிறுத்தி போராட்டம் நடத்தி வரும் போராட்டக்காரர்களை சந்திக்க நேற்று அவினாசி சென்றார்.

முன்னதாக அவர் கோவையில் நிருபர்களிடம் கூறுகையில்,

கடந்த முறை இலங்கை தமிழர்களுக்கு இழைத்த துரோகத்தால் தி.மு.க.காங்கிரஸ் கூட்டணிபடு தோல்வி அடைந்தது.

அதே நிலைமையைதான் இநத கட்சிகள் வரும் தேர்தலிலும் சந்திக்கும்.

வெளிநாடு வாழ் இலங்கை தமிழ் எழுத்தாளர் கூறும் போது, இலங்கை அரசு பிரபாகரன் இறநது விட்டதாக கூறியுள்ளது என்றார். ஆனால், இந்திய அரசு பிரபாகரன் இறந்துவிட்டதாக இன்னும் அறிவிக்க வில்லை.

இறந்து விட்டார் என்றால் இந்திய சிறையில் உள்ள 7 பேரை வடுதலை செய்யவேண்டும் ஆனால் இந்திய அரசு அதனை மறைத்து வருகிறது.

எனவே பிரபாகரன் இறந்து விட்டதாக அறிவித்த அறிவிப்பு பொய்யாகும். பிரபாகரன் உயிருடன் உள்ளார். மீண்டும் ஈழப்போர் தொடங்கும் என பழ நெடுமாறன் தெரிவித்துள்ளார். (செ-12)

## வித்தியா கொலை...

பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த புங்குடுதீவினைச் சேர்ந்த வித்தியா என்னும் மாணவி கடத்திச் செல்லப்பட்டு கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இக் கொலை சம்பவம் தொடர்பில் 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் வை.எம்.எம்.ரியால் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மன்றில் தோன்றிய குற்றப் புலனாய்வு பிரிவினர் இன்னும் மரபணுப்பரிசோதனை அறிக்கை கிடைக்கவில்லை. அத்துடன் சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகள் உட்பட ஏனைய சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளும் இன்னும் முடியவில்லை என்றனர்.

இதனால் கோபம் கொண்ட நீதவான், விததியாவின் கொலை வழக்கானது முக்கியமான ஒரு வழக்கு. இவ்வழக்கு தொடர்பில் பொது மக்கள் மத்தியில் எதிர்பார்ப்புக்கள் உள்ளது. ஒவ்வொரு வழக்கு விசாரணையின் போதும் விசாரணை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமல் விளக்கமறியல் நீடிப்பது என்பது பொது மக்கள் மத்தியில் நீதிமன்ற நடவடிக்கை தொடர்பாக கேள்வியை எழுப்பும்.

இவ்வழக்கினை விரைவாக விசாரணை செய்வதற்காகவே குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் இவ்வழக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கினை விரைவாக முடிக்க வேண்டிய தேவை இல்லை என்றால் ஊர்காவற்றுறை பொலிஸாரிடமே இவ்வழக்கினை விசாரணை செய்ய விட்டிருக்கலாம்.

ஒவ்வொரு வழக்கு விசாரணையின் போதும் சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது என்று பத்தரிகைகளில் செய்தி வெளியிடப்படும் போது எதற்காக இவ்வாறு விளக்கமறியல் நீடிக்கப்படுகின்றது என்று மக்களுக்கு தெரியாமல் போய்விடும்.

வித்தியாவின் கொலை வழக்கின் ஒவ்வொரு கட்டம் கட்டமாக நடைபெற்ற விசாரணையில் என்ன நடைபெற்றது என்பதை அறிக்கைகளாக அவ்வவ் போதே மன்றிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதுவரையில் இக் கொலை வழக்குத் தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் முழுமையான அறிக்கை அடுத்த வழக்குத் தவணையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இல்லாவிட்டால் நீதிமன்றத்தினால் குற்றப் புலனாய்வு பிரிவினர் மீது உரிய கட்டளை பிறப்பிக்கப்படும் என்று உத்தரவிட்டிருந்தார்.

அத்துடன் சந்தேக நபர்கள் 10 பேரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதன்போது மன்றில் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தாங்கள் மன்றில் கருத்து தெரிவிக்க வேண்டும் என்று கோரியிருந்தனர். இதற்கு மறுப்புத் தெரிவித்த நீதவான் உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு ஏற்பவாறு சட்டத்தரணிகள் ஊடாக சந்தேக நபர்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருந்தார். (செ-4)

## 26 கிலோ...

முன்தினம் இரவு 8.30 மணிக்கு கைது செய்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நேற்றுமுன்தினம் மாலை 8.30 மணியளவில் யாழ்.பண்ணைப் பகுதியில் 26 கிலோ கேரள கஞ்சா பொர்திகளுடன் 3 நபர்கள் குறித்த கஞ்சா பொதிகளை கை மாற்றுவதற்காக நின்றிருந்த நிலையில், புலனாய்வுத் துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 26கிலோ கஞ்சா மற்றும்3கைத்தொலைபேசிகள் மற்றும் 3 மோட்டார் சைக்கிள்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சா பல இலட்சம் ரூபா பெறுமதி உடையது எனவும், சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களும் விலை உயர்ந்தவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களில் இருவர் முல்லைத்தீவினை சேர்ந்தவர்கள் எனவும் மற்றும் ஒருவர் பருத்தித்துறையை சேர்ந்தவர் எனவும் இவர்களில் ஒருவர் பிரான்ஸ் நாட்டின் பிரஜா உரிமை பெற்றுள்ளார் எனவும் தெரிய வந்துள்ளதாக வூட்லர் தெரிவித்தார். இக்கேரள கஞ்சா மிகவும் பெறுமதி வாய்ந்தது எனவும், இது தொடர்பான விசாரணைகளை தாம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்,

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் மற்றும் கஞ்சா பொதிகள் பதின்மூன்றும், மோட்டார் சைக்கிள் மூன்றும் நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளதாகவும் கூறினார். கைது செய்து செய்யப்பட்ட மூவரும் இளைஞர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-4,9)

## ஊழியர் சேமலாப...

தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாபநிதியத்தின் 30 வீத கொடுப்பனவு ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ் மாவட்டத்தில் உள்ளபிரதி தொழில ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

யாழ்.மக்களுக்காக முக்கியமான செயற்பாட்டை ஆரம்பிப்பதற்காக வருகைதந்ததில் மகிழ்சி அடைகிறேன். ஊழியர் சேமலாபநிதி உண்மையில் வேலைசெய்யும் ஊழியர்களுக்கே சொந்தமானது. ஊழியர்களின் தேவைகளை பூர்த்தி செய்யாமல் இந்த பணத்தை நாம் சேமித்து வைத்திருப்பது அர்த்தமற்றது. எனவே எமது அரசு எதிர்காலத்தில் அவர்களுக்கான தேவைகளை சிறப்பாக செய்து கொள்ளும் எனஎதிர்பார்க்கின்றோம்.

ஊழியர் சேமலாபநிதியத்தின் 30 வீத கொடுப்பனவு வழங்கும் சேவை இதுவரை கொழும்பு தலைமை காரியாலயத்தில் மட்டுமே நடைபெற்றுவந்தது. இனிவரும் காலத்தில் வடமாகாணம் முழுவதிலும் உள்ள தொழிலாளர்கள் அனைவரும் வடபகுதிகாரியாலயத்தில் மிககுறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளமுடியும். எதிர்காலத்தில் ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கல்வித் தேவையை பூர்த்தி செய்யவும் இந்த நிதியை வழங்கவுள்ளதாக சட்டம் கொண்டு வரவுள்ளோம்.

வடமாகாணத்தில் நீண்டகாலமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் மக்கள் பாரியநெருக்கடியில் உள்ளார்கள் எனவே இங்குள்ள தொழிலாளர்களுக்கு இன்னும் அதிக சேவைகளை வழங்குவதற்கு ஆவலாக உள்ளோம். இதைமிகவும் விரைவாகசெய்யவுள்ளோம் எனஅவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## மன்னாரில்...

கப்பட்ட பின்பு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த ரவிகுமார் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார். குறித்த மூவரும் ஒரு மோட்டார் சைக்கிளில் தமது வீடுகளை நோக்கி பயணித்துள்ளனர்.

இதன்போது, மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பனை மரத்துடன் மோதியமையே விபத்துக்கு காரணமென கூறப்படுகிறது.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை இலுப்பை கடவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## ஆணைக்குழு...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே வெளியேறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர் தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தோல் வியை தழுவ தான் காரணம் இல்லை என தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை வலுப்படுத்தியது தான் எனவும் இதன்போது தெரிவித்தார். (செ-12)

## விமலுக்கு...

அலுவலகத்துக்கு முன்னால் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட குழுவினர் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்த நிலையிலேயே நீதிமன்றம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (செ-12)


### காணி விற்பனை

சுன்னாகம் சந்திக்கு அண்மையில்
கே.கே.எஸ் வீதியில் கிழக்குப் பக்கமாக
அமைந்திருக்கும் எரிபொருள் நிரப்பு
நிலையத்திற்கு பின்புறமாக 100 M
தூரத்தில் 7 பரப்பு காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இலக்கம் (3623)
0714806309

### தேவை

யாழ் நகரில் இயங்கும் அச்சகத்திற்கு
1. கணனி ரைப் செற்றிங் தெரிந்தவர்கள்
2. இயந்திர இயக்குனர் (Kod மைண்டர்).
அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு
கொள்ளவும் (3651)
0772506234

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
❖ செய்திகள்
❖ புகைப்படங்கள்
❖ நிகழ்வுகள்
❖ பேசும் படங்கள்
Viber



போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச்
செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில்
உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை
இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல.
076 636 3378

புலமைப்பரிசில் - 2016
பரீட்சை ④ல் அதிகூடிய
புள்ளி பெற்ற
பரிசுக்குரியவர்கள்
✸ செ. பார்கவி -178
(யா/இந்து மகளிர்
ஆர.பா)
✸ மா.தனுஷியன் -173
(யா.ஆனைப்பந்தி
மெ.மி.வித்)
✸ சி.சந்தோஷ் -160
(யா/ ஆனைப்பந்தி
மெ.மி.வித்)
(C-3791)
அடுத்த பரீட்சை
21-02-2016(ஞாயிறு)
✸விரும்பிய 6 நேரங்களில்
பரீட்சை
✸வெளி மாணவர்களும்
பரீட்சைக்கு தோற்றலாம்
தொடர்புகளுக்கு
புதிய நாவலர் கல்வி
நிலையம்
ஆனைப்பந்தி சந்தி
யாழ்ப்பாணம்
T.P - 0774598440

கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான
### விசேட பொதுக்கூட்டம்

வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான
விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 22.02.2016
திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு மீசாலை
பழைய புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்
உள்ள உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும்.

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது
கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(இ -செயலாளர்

### பாஷண உத்தாபன, சபிண்டீகரண அழைப்பு



திருமதி சிவகௌரி யோகானந்த சர்மா

09.02.2016 அன்று சிவபதமடைந்த
சிவசுப்பிரமணியக் குருக்கள் ஐயாவின் மகள்
அமரர் திருமதி சிவகௌரி யோகானந்த சர்மா
அவர்களின் பாஷண உத்தாபன, சபிண்டீகரண
நிகழ்வு 21.02.2016 ஞாயிற்றுக்கிழமை
அன்னாரின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.
அத்தருணம் இடம்பெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்
தனையிலும், நண்பகல் இடம்பெறும் மதிய
போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
*தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*
077 998 0492 (சி-3790)

இங்ஙனம் - குடும்பத்தினர்
சிவகிரி. இல. 37/3, கணேசபுரம், கிளிநொச்சி.

2015 நவம்பர் அனுமதி பெற்ற 5 பேர் விசா வென்றனர்!
உள்நாட்டு, வெளிநாட்டு தொழில்
& விசா ஏற்பாட்டுடன்
O/L உடன் விரும்பிய எந்த நாட்டுக்கும் சென்று
இலட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்க
Hotel Management
University of Sunderland
SPOT ADMISSION
வெளிநாட்டு பிரதிநிதியை நேரில் சந்தித்து
அனுமதி பெற்று மே மாதம் பயணமாகலாம்!
வவுனியா 26-02-2016 வெள்ளி பி.ப. 2 மணி
நெல்லி ஸ்ரார் ஹொட்டேல்
யாழ்ப்பாணம் 27-02-2016 சனி காலை 10 மணி
கிறீன் கிறாஸ் ஹொட்டேல்



பிரவேசம் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு : www.sikaram.lk
அனுமதிகளுக்கு:
077 36 16 798
021 222 0011
(சி-3787)
SIKARAM HOTEL SCHOOL
Sikaram (Pvt) Ltd.
275-2/1 மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.